விசுவ மலர் 4

உ

# நவராத்திரி விரதமும் அதன் தத்துவமும்



தெல்லியூர்
விசுவகலாமணி, பண்டிதர்

## இ. சி. கந்தையா ஆச்சாரியார்

ஓம்
தேவி துணை

# நவராத்திரி விரதமும் அதன் தத்துவமும்


*ஆசிரியர்*

விசுவகலாமணி, பண்டிதர்

இ. சி. கந்தைய ஆச்சாரியார்



*அச்சுப்பதிவு*

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

முதற்பதிப்பு



ஆசிரியர் இ. சி. கந்தைய ஆச்சாரியார்

உரிமை பதிவு] 1963 [விலை ரூபா 1.50

ஓம்

# அணிந்துரை

**மகாமகோபாத்தியாயரும், மகாவித்துவசிரோன்மணியுமாகிய புன்னாலைக்கட்டுவன்-பிரஹ்மஸ்ரீ. கணேசையரவர்கள் உவந்தளித்தது**

தமிழ்க் கலைப் புலமையின் செழுமை கண்டு சென்னை அரசாங்கத்துச் சட்டசபை அங்கத்தவருள் ஒருவராக விளங்கிய திரு: தெ—மு—தெய்வசிகாமணி ஆச்சாரியார் F·R·S·A·; M·L·C· அவர்களால் "விசுவகலாமணி" என்னும் பட்டம் அளித்துக் கௌரவிக்கப் பெற்றவராகிய பண்டிதர் திரு. இ. சி. கந்தைய ஆசாரியாரவர்கள் எனது நீண்டகால நண்பர் பலருள் ஒருவராவர்.

இவரது தமிழ் ஆர்வமும் சமயப்பற்றும் சமூக அபிமானமும், சமூக சேவையிற் சலிப்பறியாத தியாகத்தன்மையும் மிகமிகப் பாராட்டத்தக்கன

வாம். மேலும் இவர் இளமை தொட்டுக் காலத்துக்குக்காலம் பாடியபல பாடல்களும், கட்டுரை நூல்கள், ஆராய்ச்சிகள் சிலவும் எனது பார்வைக்கு உரியனவாய் இருந்தன. அந்தவகையில் இந்த '' நவராத்திரி விரதமும் — அதன் தத்துவமும் '' என்ற சிறிய நூலின் கையெழுத்துப்பிரதியும் எனது கண்ணோட்டத்துக்கு விடப்பட்டது.

அதில் பெரிதும் சமயத்தின் உண்மைத் தத்துவம், தமிழர் பெருமை, தேவியின் தோற்ற ஒடுக்க நிலைகளும் பிறவும் துலக்கமாக விவரிக்கப்பெற்றுள்ளன. இன்னும் நவராத்திரி விரதத்தின் சிறப்பும் அதன் உண்மைத் தத்துவங்களும், அவ்விரதத்தைக் கொண்டாட வேண்டிய அவசியமும் நன்கு ஆராயப்பெற்றிருக்கின்றன. அத்துடன் அதன் ஈற்றில் மூவகைச் சத்தி பேதங்களுக்குமுரிய துதிப் பாடல்கள் பலவும் இடம் பெற்றிருத்தல் தேவி பூசனைக்கு மிகப் பொருத்தமானதே.

இத்தகைய நூல்களே நம் சைவசமயத்துக்குப் புத்துயிர் அளித்துப் பாதுகாக்க வல்லன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஆகவே, இந்நூல் பெரிதும் சைவநன்மக்கள் ஒவ்வொருவரது கையிலும் இருக்கத்தக்கது என்போம். இன்னும் இந்நூலாசிரியர் இதுபோன்ற சமயவளர்ச்சிக்குரிய நூல்களை எழுதுவதற்கு ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆற்றலையும் கொடுத்தருளுமாறு யாண்டும் வேண்டுவோமாக.

விளம்பி ஆண்டு ஆவணித்திங்கள்
10-9-1958 சி. கணேசையர்.

உ
ஓம்
தேவிதுணை

# முகவுரை

இந்நில உலகில் இந்துக்கள் மாத்திரமன்றி ஏனைய நாட்டினரும் மிகப்புராதன காலந்தொட்டு தேவி வழிபாடு செய்வதில் பின்வாங்கினரில்லை. அங்ஙனம் வழிபடற்கேற்ற சிறப்பு அத்தேவியின் பாலுள்ள மக்களது தெய்வபக்தியையும் தேவியின் ஒப்பற்ற பெருமையையும் குறிக்கின்றது. ஆகவே பண்டைநாள் மாந்தர் உலகமாதாவாகிய தேவியை நுணுகி ஆய்ந்து ஊன்றி உணர்ந்து உள்ளன்பு கொண்டு ஒழுகியமை அவர்களது அறிவின் கூர்மையை ஒருவாறு புலனுறுத்துகின்றது.

அவ்வழி அத்தேவிவழிபாடு மனிதவர்க்கத்தினரால் பரம்பரை பரம்பரையாக கையாளப்பெற்று வந்திருக்கக் காண்கின்றோம். அதனாற்றான் அத்தேவியின் விரததினங்களுள் முக்கியமான நவராத்திரி விரதநாளை ஒன்பது இரவுகளாகத் தொடர்ந்து அனுட்டித்து பூசை புரிந்து விழாக்கள் கொண்டாடி விசயதசமி (வெற்றிப்பத்திரா) ஆகிய பத்தாவது நாளையும் சேர்த்து ''தசரா''க் கொண்டாட்டம், எனவும், கன்னிவாழை வெட்டல் ஆகிய (ஆயுதப்பிரயோக) ஆயுதபூசை நிறைவுநாள் எனவும், போற்றி வருகின்றனர்.

எனவே அத்தகைய மகத்தான 'மகாநோன்பு' நாளின் தத்துவங்களையும் தேவிவழிபாட்டின் நிச மான உண்மைகளையும் எவர்களும் எளிதிலுணர்ந்து அவளது அரிய விரதத்தினை அனுட்டித்து உய்வ தற்கு உதவியாகுமாறு ஓர் தனிநூல் வெளியிடல் உசிதமென உன்னி நண்பர் சிலர் எம்மிடம் பல கால் கூறித் தூண்டி வந்தனர்.

அதன்பயனாக அவ்வழி மனமுந்தப் பெற்று நவராத்திரி சம்பந்தமாக இதுகாறும் வெளிவந்த நூல்கள் கட்டுரைகள் பல வினையுந்தழுவி புதிய எமது ஆய்வினையும் புகுத்தி ''நவராத்திரி விரதமும் அதன் தத்துவமும்'' என்னும் தலைப்பெயர் தந்து இந்நூலை வெளியிடுகின்றோம்.

இப்பதிப்பில் நவராத்திரி விரதகாலங்களிலும் பிறநாட்களிலும் தேவியைத் துதித்தற்கு வாய்ப் பான (தேவிபூசைக்குகந்த) பல அறிஞர்களது தோத்திரப் பாக்களையும் இறுதியிற் சேர்த்துள் ளோம். அது நம் சைவநன் மக்களுக்கும் பிறர்க் கும் பெரும்பயனைத்தரும் என்பது எமது துணிபு.

எனவே இதனகத்து ஏதும் பிழைகள் காணப் பெறின் அவற்றை அறிஞரெவரேனும் எமக்கு அறிவுறுத்துவரேல் அதிவணக்கத்துடன் ஏற்று மறுபதிப்பில் திருத்தமுற வெளியிட சித்தமாயி ருக்கின்றோம். நல்லன ஏற்று அல்லன அகற்றுக.

ஆனித்திங்கள் இ. சி. க. ஆச்சாரியன்
3-7-63.

ஓம்
தேவி துணை

# நவராத்திரி விரதமும் அதன் தத்துவமும்

## கலைமகள் வணக்கம்

"தவளத் தாமரைத் தாதார் கோயி
லவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே"
— சிலப்பதிகாரம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்ப ளிங்கு வாராதிடர்
—காளமேகப்புலவர்

ஆரணியம் பிகையமலை யாமளைமா லினிகவுரி யாளியூர்தி
பூரணிசங் கரிகுமரி பைரவிமா லயன்முதலோர் போற்று மூல
காரணிமுக் கண்ணிதிரி புரையரவ கங்கணிகங் காளிசூலி
தாரணியி லன்பர்களுக் கின்பருண்மா தரிமலர்த்தாள் தலைமேற்
கொள்வாம்.

— விசுவப்பிரமபுராணம்

''சுரும்புமுரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோழ் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி
கவுணியர்க்குப் பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத் தென்னை
எடுத்தாண்ட அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி
ஆரண நூபுரஞ்சிலம்பு மடிகள் போற்றி''

— திருவிளையாடற் புராணம்.

உலகின்கணுள்ள மக்கள் இருவினைக் கீடாகச் செனித்து இங்குள்ள போக போக்கியங்களாகிய இன்ப துன்பங்களை அனுபவித்து ஈற்றில் ஆன்ம ஈடேற்றம் பெற்று உய்திபெறுவதற்குச் சமயங்கள் உறுதுணையாக அமைந்திருக்கின்றன. எனவே சமயங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்து விளங்கும் சைவசமயத்திலே பற்பல விரதங்கள் அநுட்டிக்கப்பெற்று வருகின்றன. அவற்றுள் சிவராத்திரியும், நவராத்திரியும் மிக முக்கியமானவை.

சிவராத்திரி விரதமானது சிவபெருமானைக் குறித்து அவரதருளினைப் பெறவேண்டி அந்தந்த வருடத்தில் வரும் மாசிமாதத்து கிருஷ்ணபட்சச் சதுர்த்தசித்திதியும் சோமவாரமும் திருவோண நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் கண்கள்

தூங்காது சிவத்தியானத்துடன் விழிப்பிருந்து நான்கு சாமங்களிலும் சிவானுக்கிரகத்தைக் கோரி சிவபூசை செய்து அனுட்டிக்கப்பெறுகின்றது.

## சத்தியும் சத்தியின் மூவகைத்தோற்ற ஒடுக்க முறைகளும்

ஆனல் நவராத்திரி விரதமோ உலகமாதாவாகிய தேவியைக்குறித்து தேவியின் மூவகைக் குணங்களாகிய சாத்வீகம், இராசதம், தாமதம் பொருந்திய ஞானசத்தி, கிரியாசத்தி, இச்சாசத்தி என்கின்ற மூவகைத் தோற்றங்களை எடுத்தருளும் அப்பரா சத்திக்கு ஒன்பதுநாள், இரவுகளை மகா நோன்புநாட்களாகக் கொள்ளப்பெற்று வருகின்றது.

மேற்காட்டிய மூவகைச்சக்திகளுக்கும் முறையே உமாதேவி அல்லது துர்க்கை, இலக்குமி, சரசுவதி என்னும் பெயர்கள் வழங்குவர். ஆகவே மூவகைச் சக்திகளுக்கும் முறையே ஒவ்வொருவருக்கும் மும்மூன்று நாளாக வரும் ஒன்பது நாளிரவுகளிலும் தொடர்ந்து அவ்விரதம் அனுட்டிக்கப்பெறும்.

எனவே அத்தேவி வழிபாடு உலகத்தின் எப்பகுதியிலும் பற்பல வடிவில் பாவனைசெய்து தொன்றுதொட்டே நடைபெற்று வந்திருப்பதை சரித்திரங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

பொதுவாக இத்தேவி வழிபாட்டுக்கு இணையான வேறுவழிபாடெதுவும் உலகெங்கும் காண்பது அரிது. ஏனெனில், தேவியானவள் யாண்டும்

எவ்வுயிர்களிடத்தும் யாதொரு பயனையுங் குறி யாது அவர்கள் மாட்டுள்ள இரக்க மேலீட்டால் கருணையையே சொரிந்து யாதொருநாமரூபமுமற்று அரூபமான நிலையில் நாதவிந்துவடிவாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றாள். அவளை இயவுள் எனக்கூறி அப் பரம்பொருளைப் பத்திகொண்டு வழிபடுப வர்கள் அப்பொருளுக்கு ஏதாவது ஒரு முறையை யும் சொல்லி வழிபாடு செய்வதுதானே பொருத்த மாகும். இனம் இனத்தையே தழுவுதல் இயல்பு. அதுபோல மனிதவடிவம் எடுத்துள்ள நாமும் மனித ருடனேயே பழகவிரும்புகின்றோம். இந்த வகை யில் இறைவனையும் எம்மை ஒத்த வடிவில் வைத்து எமக்குமிக நெருங்கிய முறைகளுள் ஒன்றையிட்டு எம்மை ஈன்றளித்த தாய் என்று சொல்லிப் புகழ் வது பொருத்தமானதல்லவா? ஏனெனில் தாய்க் கும் பிள்ளைக்கும் இடையேயுள்ள ஐக்கியபாசம் மிக ஒப்பற்றதாகும். உலகில் வேறு எதையும் அதற்கு இணையாகச்சொல்ல இயலாது. ஆனால் ஓர் ஆண் டானிடம் சேவிக்கும் அடிமைகூடத் தனது எசமான னது முன்னிலையில் மிக அஞ்சி ஒடுங்கி அதிக பயபக்தி யுடனும், பணிவுடனும் எட்டத்திலேயே நிற்கக் காண்கிறோம். அதுபோல ஓர் தந்தை இடத்திலும் தனயனானவன் மிக நெருங்கி உறவாடும் வழக்கமும் இல்லையல்லவா? அத்துடன் வயது முதிர முதிரப் பிதாவுக்கும் பிள்ளைக்குமிடையே வேற்றுமைகள் பல தோற்றுதலும் இயல்பு. ஆனால் அன்னைக்கும் அவளது பிள்ளைக்கும் இடையே உள்ள இயல்போ ஒருவித மாற்றமுமடையாது என்றும் ஓரேபடித் தாக விளங்கக்காணலாம். அதுபோலவே தாயின்

தன்மை வாய்ந்த தெய்வத்தை வழிபாடு செய்வது எவர்களுக்கும் மிக எளிதான செயலேயாகும். பெற்றவளோடு பிள்ளைகள் பழகுவதற்கு யாதொரு விதிவிலக்குச் சட்டதிட்டங்கள் கூடக் கிடையாது. இத்தகைய வேற்றுமை இன்மையாற்றான் இந்த *நவராத்திரி* நோன்புநாளை நன்கு தெரிந்து பெண்பாலால் வழங்குவதாகிய கன்னிமாதத்திலே, அதாவது வசந்தகாலமாகிய கார்காலத்திலேயே மக்கள் வழிபடற்குகந்த அத்தெய்வமாகிய தேவியானவள் மகிழ்வுடன் கொலுவீற்றிருக்கும் தினம் இது எனக்கண்டு அவளுக்கே வழிபாட்டைச் செலுத்தி வந்துள்ளனர். பொதுவாக உலகிலே நமக்குக் கிடைத்தற்கரிய அரும் பெரும் பொருள்கள் கிடைக்குங்கால் அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்து அளவுகடந்த அன்பின் பெருக்கால் பலபல பெயர்கள் சொல்லி அழைத்து இன்புறுகின்றோமன்றோ? அதுபோல எவர்களாலும் எளிதில் கண்டுகொள்ள முடியாததும், என்றும் அழிவற்றதும் சர்வ உயிர்களிடத்தும் சதா கருணையே சொரிந்து அன்பே வடிவமாக ஆனந்தித்துக் கொண்டிருக்கின்ற உலக மாதாவாகிய தேவியையும் பற்பல பெயர்கள் சொல்லி அழைப்பதில் வியப்பில்லையல்லவா? எனவே தேவியைத் துதிக்குங்காலை ஒவ்வொரு நாட்டவரும் வெவ்வேறு பெயர்களைச் சொல்லித்தான் அழைத்து மகிழ்கின்றனர்.

காச்மீரத்தில் அம்பாள் என்றும், இராசபுதனத்தில் பவானி என்றும், கூர்ச்சரத்தில் கல்யாணி

என்றும், மிதிலேயில் உமை என்றும் வட இந்தியாவில் காளி என்றும் பலவாறு சொல்லிக் கொள்ளுகின்றனர். அத்துடன் தமிழ்நாட்டிலோ தேவியை துர்க்கை, கொற்கை, தடாதகை, கொற்றவை, காமாட்சி, மீனுட்சி, சாமுண்டி, பகவதி, ஐயை, சிவை, காயத்திரி முதலிய பெயர்களினுலும்; இலக்குமியை, திருமகள், செய்யவள், செங்கமலே, செந்திரு, பூமகள், இளேயவள், சீதேவி, சாவித்திரி என்றும்; சரசுவதியை நாமகள், பாமகள், கலேமகள், கலேவாணி, வெண்கமலே, சகலகலாவல்லி, பாரதி முதலிய பெயர்களினுலும் இன்னும் ஒவ்வொருவருக்கு ஆயிரம் ஆயிரம் பெயர்கள் சொல்லியும் துதித்து வருகின்றனர்.

பொதுவாக மக்கள் நிலம், நீர், கல்வி, திங்கள், இரத்தின வகைகள் முதலியவற்றை எல்லாம் பெண்பெயராலேயே அழைப்பதுண்டு. ஆகவே, சகலகலாவல்லியாகிய சரசுவதி என்னும் பெயரினுள்ள பொருளும் பெண்பாலால் வழங்கப் பெறும் கலேமகளேக் குறிக்கின்றது. எங்ஙனமெனில், சரசுவதி ''சரஸ்வதி'' என வழங்கும் ஓர் வடமொழிச்சொல் ஆகும். இதிலுள்ள சர என்ற பதத்திற்கு ஒலி (சுரம்) சத்தம் தொனி எனவும்; வதி என்பதற்கு படிவு, அமைவு, உறைவு சேர்வு செறிவு எனவும் பொருள் வழங்கப்பெறுகின்றது. பெறுவதால் சரசுவதி ஒலிகளில் உறைபவள் ஆகி உலக மொழிகள் அனேத்தினுக்கும் தானே தாயாய் மொழிகளின் முதல்வியாய் விளங்கக் காண்கின்ருேம். ஆகவே அக்கலேச்செல்வியை கன்னி

மாதத்திலேதான் வழிபாடுசெய்து போற்றுதல் தொன்றுதொட்டு வழங்கப்பெற்றுவந்த வழக்க மாகும். ஆதலால் அக்கன்னி (புரட்டாதி) மாதத்திலோ உலகில் இயற்கை வனப்பெல்லாம் எழிலோடு விளங்க, சமுத்திர நீரினின்றும் சூரிய காங்கையினுல் ஆவியாக மாற்றம்பெற்று மேலே சென்று விண்ணகத்தே முகிலாகப் படியுமாறு சேர்த்த அமிர்த தாரைகளை மழையாகச் சொரிந்து நிலத்தைச் குளிர்வித்த பெருமகிழ்ச்சியால் அந் நிலமகளானவள் நெடுநாள் தன்னைவிட்டுப் பிரிந்து தூரச்சென்றிருந்த கணவனுனவன் மீண்டு வரக் கண்ட கற்புடையாளைப் போன்று மிகுந்த குதூ கலத்தோடு உள்ளம் பூரித்தவளாய்த் தன் உட லைப் பச்சைநிறப் பட்டாடையினுல் மூடி ஆபர ணுதிகளையுமிட்டு அலங்கரித்தாற்போன்று காட்சி யளிக்கின்ருள்.

ஆகவே, அக் கார்காலத்திற்ருன் உலகமக்க ளது உள்ளங்களெல்லாம் உவகை இன்பம் பெருக் கெடுத்துப் பொங்கி வழிகின்றன. எங்கே பார்த் தாலும் அங்கெல்லாம் பலவர்ணப் பூங்கொத்துக ளோடு கூடிய மரம், செடிகொடி புல்பூண்டாதிய யாவும் பச்சைப்பசேலென்ற இலைகளின் எளிலை யும் பரப்பிப் பார்ப்பவர் கண்களுக்குக் காட்சி யளிக்கின்றன. பட்சிசாலங்கள் கூட இயற்கை அன்னையின் எழிலினைக்கண்டு மயங்கி இனிய கீதங் கள் பாடி ஆடிக் கூடி மகிழ்ந்து குதூகலிக்கின் றன. விலங்கினங்களும் அங்ஙனம் மகிழுகின்றன வன்ருே? ஆதலால் இந்தக்காலமே மக்களனைவரும்

மகிழ்வுடன் இருத்தற்கும், இத்தனை இன்பங் களுக்கும் ஏதுவாக இருக்கின்ற தேவியைப் போற்றுதற்கும் வாய்ப்பான காலம் என நம்முன் னோர் கண்டுகொண்டதில் வியப்பில்லையல்லவா?

என்வே கன்னிமாதம் என்னும் புரட்டாதி மாத்துப் பூர்வபக்கப் பிரதமைத் திதி முதலாக வரும் ஒன்பது நாட்களிரவிலும் அமாவாசைக்கு முதல்நாள் நோன்புடன் தொடங்கி உலக மாதா வாகிய உமையம்மையாரின் இன்னருள் பெற்று வாழ விரும்பும் ஒவ்வொருவரும் நவராத்திரி என் னும் அச்சிறந்த விரதத்தைப் பத்திசிரத்தையுடன் அனுட்டித்து வருகின்றனர். அங்ஙனம் அனுட் டித்த ஒன்பதாம் நாளிரவு கழிந்த பத்தாம்நாள் விசயதசமி எனப்படும். இதனையே வட நாட்டார் தசரா என்று கூறுவர். விசயதசமி என்றாலும் தசரா என்றாலும் ஒருபொருளையே தருதல் காண்க. நவராத்திரி என்றால் தொடர்ந்து ஒன்பது இரவு களிலும் நோற்கும் விரதத்திருநாள் என்பது பொருள். விசயதசமி அல்லது தசரா என்றால் நவராத்திரி ஆகிய ஒன்பது இரவுகளுடன் வெற்றி நாள் விழாவாகிய பத்தாம் இரவையும் சேர்த்து பத்திரா=தசரா அல்லது விசயதசமி என வழங் கினர் என்பது தெளிவு.

இச் சிறந்த விரதத் திருநாட் கொண்டாட் டத்தை பெரும்பாலும் அகில இந்தியாவிலும் அதனை அடுத்த ஈழத்திலும், மற்றும் இந்து சம யத்தவர்கள் வதியும் பிறநாடுகளிலும் இன்னசாதி

இன்ன சமயத்தார் எனக் குறிப்பிடாது அரசர் முதல் ஆண்டி ஈருக மிகப் பூர்வகாலந்தொட்டு அனுட்டித்து வருகின்றனர். அதனுற்ருன் அத் திருநாட்களை மகாநோன்பு — மாநோன்பு — மகா நவமி — நவராத்திரி — விசயதசமி — பத்திரா — தசரா — வெற்றிவிழா — தொழில்வல்லார் தொழுகைத்திருநாள் — விசுவகன்மர்தினம் சரசு வதிபூசை, ஆயுதபூசை என்றெல்லாம் பலவாறு சிறப்பித்து வழங்கி வருகின்றனர்.

ஆனுல் சிவராத்திரி விரதமோ ஓர் இரவில் மாத்திரம் விழிப்பிருந்து அனுட்டிக்கத்தக்கது. நவராத்திரிவிரதமோ அதுபோன்றதன்று. சிவத் திலும் பார்க்கச் சத்தி எத்துணைச் சிறப்புடைய ளாக இருக்கின்ருளோ அவ்வளவுக்கு அவளது நோன்புநாட்களையும் ஒன்பதுநாளிரவும் தொடர்ந் தனுட்டித்து தேவியின் திருவருளைப் பெற்று பத்தாம் இரவாகிய விசயதசமியிலன்று (தசரா) சரசுவதி பூசைமுடிந்தபின் விரதத்தையும் நிறைவு செய்து மனத்திலே சிவநாமம், தேவி திருநாமங் களைச் சொல்லித்தியானித்து சிவனடியார்கள் சின்னஞ்சிறிய குழந்தைகள் பெரியோர் முதலிய வர்களுடன் கூட இருந்து அன்னம் பலகார பட் சணங்கள் பழவர்க்கங்களை உடனுண்டு விரதத்தை நிறைவுசெய்யும் முறையைக் கையாண்டு வரு கின்றனர்.

இவ்விரதம் அனுட்டிக்குங்கால் மன்னர் முதல் மக்களீருய் அவரவர் இல்லங்களிலும், மடாலயம்

விதாலயம், சிவாலயம், கம்மாலயம் முதலிய சகல ஆலயங்களிலும், மன்றங்களிலும் உமாதேவி அல்லது துர்க்கை, இலக்குமி, சரசுவதி முதலிய தேவிகளைக் கொலுவிருத்தியும், கலசங்களிலே கும்பங்கள் வைத்து அவைகளை அலங்கரித்து அதிலே அத்தேவிகளை ஆவாகித்தும் பூசைகள் செய்யப் பெறுகின்றன. கடவுளை இலிங்கம், வேல், சூலம், தெய்வத் திரு உருவச்சிலைகள், ஓவியங்கள் முதலியவற்றிலே எவ்வாறு வழிபடுகின்றோமோ அவ்வாறே கும்பங்களிலும் அவைகளை வணங்கி அருள் பெறுகின்றோம். கும்பங்களும் தெய்வத்தின் திருவுரு அமைந்த வடிவங்களாகவே பாவிக்கப் பெறுகின்றன. இதனை சகலாகம சங்கிரகம் என்னும் நூலில்:—

"கடம் மாம்ஸந்து விந்யஸ்ய தோயம் ரக்த மிதிக்ஸ் மிருதம்:
ரத்நம் அஸ்தி சமம் வாபி சூத்ரோநாடி ததை வச:
நாளிகேர சிரோயுக்தம் கேசம் சாம்ர பல்லவம்:
வஸ்திரம் சர்ம சிகா கூர்ச்சம் மந்த்ரம் பிராணமுதீரித:"

எனக்கூறி கும்பத்துக்குச் சுற்றிய சீலை, தோல் எனவும், நூல் நாடி நரம்புகள் எனவும், குடம் தசைகள் எனவும், தண்ணீர் இரத்தம் எனவும் உள்ளே போடப்படும் இரத்தினம் எலும்பு எனவும், தேங்காய் தலை எனவும், மாவிலை தலைமயிர் எனவும், தர்ப்பை குடுமி எனவும், அதிலே பதிக்கப்பட்ட மந்திரம் உயிர் எனவும் கொண்ட திருவுருவமாம் என்று விளக்குவதைக் காணலாம்.

ஆகவே நவராத்திரி தினங்களில் முதல்மூன்று நாளிரவிலும் உமாதேவி அல்லது துர்க்கை இரு

வரையும் ஒரே கும்பத்திலும், அடுத்தமூன்று நாளிரவிலும் திருமகளாகிய இலக்குமியை வேறோர் கும்பத்திலும், மற்றமூன்று நாளிரவிலும் கலைமகளாகிய சரசுவதியை இன்னொரு கும்பத்திலுமாக ஆவாகித்துப் பூசைகள் நடைபெறுவது வழக்கம்.

இங்ஙனம் மும்மூன்றான ஒன்பது இரவுகளிலும் சத்தியின் முக்குணங்களாகிய தாமதம், இராசதம், சாத்வீகம் துலங்கும் பான்மையில் முதன்மூன்று நாளிரவும் வீரச்செயலுக்கேற்ற இச்சாசத்தியாகிய சிவப்பு நிறங்கொண்ட உமை—துர்க்கை வடிவிலும் அடுத்த மூன்றிரவும் இரக்கச் செயலுக்குரிய பச்சை நிறங்கொண்ட கிரியாசத்தி என்னும் திருமகளாகிய இலக்குமி வடிவிலும், மீதி மூன்றுநாளிரவிலும் ஞானசத்தி என்னும் வெண்ணிறங்கொண்ட கலைமகளாகிய சரசுவதிவடிவிலும் பாவனைசெய்து வழிபாடாற்றுகின்றனர்.

இத்தகைய மூன்று தெய்வ உபாசனைகளாலும் முறையே ஆண்மை, செல்வம், அறிவு என்னும் வீரம், தியாகம், ஞானம் என்பவைகளை துர்க்கை இலக்குமி சரசுவதி முதலிய மூன்று தெய்வங்களாகக்கொண்டு இம்மூன்று தெய்வங்களும் மக்கள் மேல் கருணை கூர்ந்து அருள்வழங்கி அனைவரையும் ஆசியோடணைத்துக் காக்கின்றனர் என்பது நம் முன்னோர் தம் பாரம்பரிய வழக்கு. இத்தினங்களில் அரசர்முதல் ஆண்டிஈறாயுள்ள அனைவரும் தத்தம் முயற்சிகளுக்குரிய பல்வேறு ஆயுதவகைகள், ஏடு, எழுத்தாணி, புத்தகம், பொன், நவரத்தின வகை

கள் அனைத்தையும் தத்தம் முயற்சிகளின் சித்திக்கும் வெற்றிக்கும் மேன்மைக்குமாக கொலு வீற்றிருக்கும் தேவி முன்னிலையில் வைத்து வழிபாடாற்றுவர். இன்னும் தேவிக்குப் பலவர்ணப் பூக்கள், பழவர்க்கங்கள், கடலை, வடை, தேன் குள்ல் முதலிய பலகார வகைகள், எள்ளுருண்டை அவல், நெற்பொரி, சர்க்கரை, கற்கண்டு, பால், பஞ்சாமிர்தம் முதலிய படைப்புக்கள் யாவும் பரப்பி தூப தீப நைவேத்திய ஆராதனைகள் தோத்திரங்கள் செய்வர். பின் ஒன்பதாம்நாளிரவு புராணக்கதையிற் கூறப்பெற்ற மகிடாசுரனைச் சங்கரித்த காட்சி மக்களுக்குக் காண்பிக்கப் பெறுகின்றது.

இந்த ஒன்பதுநாளிரவும் முடிந்து பத்தாம் நாள் "விசயதசமி" என்னும் வெற்றிநாள் கொண்டாடுகின்றோம். அன்று கடந்த ஒன்பதிரவும் அனுட்டித்த நோன்பின் பயனாகக் கிடைத்த தேவியின் திருவருட் பெருக்காலும் கடைக்கணிப்பாலும் வெற்றியும் சித்தியும் பெறுதற்கு அவரவர் சீவனோபாயத் தொழில்களுக்கேற்ற ஆயுதவகைகளைப் பிரயோகம் செய்யும் பாவனை காண்பிக்கப் படுகின்றது.

இத்தகைய உத்தம விரதமான ''நவராத்திரி'' என்னும் நோன்புநாளை நம்முன்னோர் மகாநோன்பு அல்லது மாநோன்பு என வழங்கினர். இந்த மாநோன்பு என்ற சொற்றொடரானது நாளடைவிற்றிரிந்து மானம்பு என இந்நாள் வழங்கப் பெறுகின்றது.

மகாநவமியின் பின்பு பத்தாவது நாளாகிய விசயதசமியிலன்று தேவியானவள் கோரரூபங் கொண்டு கோபாவேசத்துடன் புறப்பட்டு அம்பு போட்டு தேவர்களுக்குப் பகைவனாகிய மகிடாசுரனைக் கொல்லும் பொருட்டு முதன்முதல் ஆயுத பரீட்சைபார்த்தல் ஆகிய புராணக்கதையின் பாவனை காண்பிக்கப்பெறும். இதனையே வன்னி வாழை அல்லது கன்னிவாழை வெட்டல் என்றும் கூறுவர்.

ஒன்பது நாட்களாக தேவி பூசையில் சகல ஆயுதங்களும் வைக்கப்பெற்றிருந்தமையால், அத்தனை தினங்களும் ஆயுதமெடுத்து முயற்சிபுரியாத மக்கள் விசயதசமியிலன்று தேவியிடம் பெற்றுக் கொண்ட இன்னருட்டுணையால் அவ்வாயுதங்களை எடுத்து முதன் முதலாக தண்டுமுற்ருத இளம் கன்னி வாழையில் வெட்டி அவ் ஆயுதங்களின் கூர்மையைப் பரிசோதித்தல் அக்கால வழக்குப் போலும், அது அவ்விதவழக்கில் இருந்தமையாலன்ருே நம்தமிழ் மூதாட்டியாரான ஔவையாரும்

"கருங்காலிக் கட்டைக்கு நாணுத கோடாரி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்"

என்று கூறி சாதாரணமாக தண்டுமுற்றிய வாழையில் ஆயுதங்கள் பாய்ந்து உட்செல்லமாட்டாது பின்னடையும் என்ற உண்மையை நிரூபித்துள்ளார். இந்த உண்மையின் அடிப்படையிற்ருன் அக்காலமக்கள் ஆயுதசோதனைக்கு தண்டுமுற்ருத இளம் கன்னிவாழையைக் கொண்டனர் போலும் இவ்வாறு ஆயுதம் பரீட்சிக்கும் அப்பழைய வழக்

கமே ஆரியரது கிரியாம்சங்களைத் தழுவித் தமிழரிடையே இன்றும் விசயதசமியிலன்று கன்னிவாழை வெட்டும் வைபவம் என்ற மாற்றத்துடன் நடைபெற்று வருகின்றது. நிற்க;

தமிழ்நாட்டவர் இந்த நவராத்திரி விரத தினத்தில் தேவியைப் பூசிப்பதற்கு வேறொரு முறையையும் கையாண்டு வந்திருக்கின்றனர், எனவும் அறிகின்றோம். எவ்வாறெனின்;

மூவகை வடிவோடுங்கூடிய தேவியைப் பூசிக்கும் தினமாகிய நவராத்திரி தொடங்கும் நாளிலிருந்து ஒன்பதாம்நாள் இரவு முடியும் வரையும் முறையே ஒன்று, இரண்டு, மூன்று என்ற எண்ணிக்கைக்கேற்ற வயதுகொண்ட குழந்தைகளாக அதாவது; முதலாம்நாள் ஒரு வயதுக் குழந்தையையும், இரண்டாம்நாள் இரண்டுவயதுக் குழந்தையையும், இவ்வாறே மூன்றுவது நாளுக்குமாக ஒன்பது தினங்களுக்கும் ஒன்பது பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து அவைகளை கலைமகள் முதலிய தேவிகளின் வடிவங்களாகப் பாவித்து அவை அவைக்கேற்ற வகையில் ஒவ்வொரு குழந்தையையும் நீராட்டிப் புத்தாடை அணிவித்து விபூதி, சந்தனம், குங்குமம், சாத்தி மலர்மாலை சூட்டி ஆபரணுதிகளாலும் அலங்கரித்து வாத்தியகோஷங்களுடன் அலங்கார தூப தீப முதலியவற்றால் முறைப்படி பதினறுவகை உபசாரங்களினுலும் பூசித்து வழிபாடாற்றி மாநோன்பாகிய நவராத்திரி விரதம் அனுட்டித்துத் தேவியருள் பெற்று

உய்ந்தனர் மக்கள். கால முதிர்வின் விளைவாக இவ்வழக்கம் மாறி வித்தியாச முறைகளுக்கமைய வழிபாட்டு முறைகள் மாற்றம் பெறலாயின. பொதுவாகப்பிள்ளைகளைத் தெய்வமாகக் கொள்வது வழக்கம். அந்த வகையில் ஆண் தெய்வங்களுள் முருகன், பாலசுப்பிரமணியன், குழந்தைவடிவேலன் எனவும், பாலகணபதி, கோபாலன், வேணுகோபாலன், பாலகிருட்டிணன், கண்ணன், மால், மாயவன் முதலிய வடிவங்களைப் பெற்றுப்பல்வேறு லீலைகளை நடாத்தி விளையாடிய தான சரிதைகளைப் புனைந்தும் பிள்ளைவழிபாட்டைப் பெரிதும் விரும்பி வாழ்ந்தனர். இப்பிள்ளைத் தெய்வங்களின் லீலை விளையாட்டுக்களைக் குறித்து அவரவர்களுக்குத் தனித்தனிப் புராணங்களும் உருப்பெற்று உலவுவனவாயின. அத்துடன் விண்டுவையும், முருகனையும் சிவபெருமானது சத்திகள் என்றவகையில் வழிபட்டு வந்திருப்பதாக தேவாரத்தில்,

''எரியலால் உருவமில்லை ஏறலாதேற லில்லைக்
கரியலாற் போர்வையில்லைக் காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா அமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலால் தேவியில்லை ஐயனையாறனார்க்கே''

என்று குறிப்பிடலால் அறிகின்றோம். இன்னும் கந்தபுராணத்தில்,

''ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் நானும்
பேதகமன்றும் எம்போற் பிரிவிலன் யாண்டு முள்ளான்''

என்று கூறுதலாலும் ஓர்க. இந்த மாபெரும் புனித வெற்றி விழாவாகிய நவராத்திரிதினத்து விசய தசமியிலேயேதேவியைக் கொலுவீற்றிருக்கச்செய்து

அவளது முன்னிலையில் தொழில்களை ஆரம்பிப்ப துடன் சின்னஞ்சிறு பாலர்களுக்கெல்லாம் வித்தி யாரம்பமும் செய்துவைக்கப்பெறுகின்றது.

ஆசிரியர்களும் தேவியைத்துதிக்கும் குறிக்கோ ளுடன் தங்கள் மாணவர்களுக்குப் பல புகழ்ப் பாக்களைக்கற்றுக்கொடுத்துப் பாடி ஆடச்செய்வர். அவையுட் சில பின்வருமாறு:—

கன்னித் திங்கள் வருசிறதையா கருத்துடன் நவராத்திரிக்கு
கன்னிகை அம்மன்பூசைகள் செய்யக் காசுபணம் வேண்டும்
பொன்னைப்போல நிறமுள்ள கனியும் பூமடை காய்மடையும்
புனிதாயப்பம் இளநீர் புட்பம் புனுகு சவ்வாதுடனே
வன்னப் பள்ளியிற் படிக்கும் பிள்ளைகள் மாதாமனைதோறும்
வாங்கும் பணமும் அரிசியுங்கொண்டு வந்திடு பூசைக்கு
அன்னப் பரிமள குங்கும மகில்கமழ் அழகிய மெய்யாளே
அம்பிகை கட்சிக்காமக் கோட்டத்து அபிராமித்தாயே.

முதலிய பாடல்களை மாணவர்களும் பாட கோலாட் டம் அடித்து ஆடப்பயிற்றியும் கூட்டம் கூட்டமாக அவர்களுடன் பாடி ஆடிக்கொண்டு அவரவர் பெற்றூர், நண்பர், பெரியார் இல்லங்களுக் கெல் லாம் சென்று, சென்று ஆடல் பாடலின் அபிநய அழகினைக் காண்பித்து அனைவரையும் மகிழச் செய்து சன்மானம் பெறுதல் அக்கால வழக்கமா யிருந்தது. இக்காலம் அவ்வழக்கு அருகிவிட்ட தால் குரு, பெரியோர், மூத்தோர் முதலியவர் களைப்பேணி உபசரிக்கும் வழக்கமும் குறைந்து வருவதாயிற்று.

இந்த நவராத்திரியோடு கூடிய விசயதசமியி லன்று அக்கால அரசர் தங்களது வாட்போர்,

விற்போர்ப் பரீட்சை செய்தலும்; மற்போர் வீரரும் மற்றும் பலசாலிகளும் ஒன்றுகூடித்தத்தம் திறமைகளைக் காண்பிப்பதும் அக்கால வழக்கம். சேர சோழ பாண்டிய வேந்தர் காலத்தில் அவர்களது சமஸ்தான வித்துவான்களாகிய ஒட்டக்கூத்தன், புகழேந்தி முதலிய புலவர்கள் சாதாரண புலவர்களை யெல்லாம் அழைத்து தேவி கொலு வீற்றிருக்கும் தினமாகிய விசயதசமியிலன்று அத்தேவி முன்னிலையிலேயே இவ்விருவரது தலையை முடிந்து குனிந்து நிற்கும்படி வரிசையாக நிறுத்தி பலவித வித்வ சாமர்த்திய விஞக்களைக் கடாவி விடையை எதிர்பார்ப்பர். விஞக்களுக்குரிய விடையிறுக்கத் தவறுவோரை இரக்கமற்ற தண்டனை செய்து வந்ததாகவும் இதிகாசங்கள் இயம்புகின்றன.

முன்னொருகாலம் பரதகண்டத்தைக் கைப்பற்றி அரசாள முன்வந்த மொகலாய மன்னர்களும் பொதுவாகத் தமிழகத்தவர்கள் நவராத்திரி நோன்புநாளில் அவரவரது ஆயுதமனைத்தும் தேவி பூசையில் வைக்கின்ற வழக்கத்தினை அறிந்து நிரபராதிகளாக இருக்கும் மும்முடி மன்னர்களது அரசுரிமைகளையும் கவர்ந்து கொண்டதாகவும் சரித்திரங்கள் சாற்றுநின்றன.

வட இந்தியாவிலே சந்திரகுப்தன் என்னும் மன்னனது ஆட்சிக்காலத்தில் நவராத்திரித்தினம் ஓர் வீரவிழாவாகக் கொண்டாடப்பெற்று வந்தி

ருக்கிறது. அக்பர் போன்ற சில மொகலாயச் சக்கரவர்த்திகள் காலத்திலும் இவ்விழா ''தசரா'' பத்திரா ''விசயதசமி'' என்னும் பொருளிற் போலும் வழிபடப்பெற்று வந்தது.

சிவாஜி மன்னன் காலத்திலுங்கூட தசரா— பத்திரா வழிபாடு நடைபெற்று வந்தது. வங் காள நாட்டில் இன்றும் தசராத்திரி விழா, சத்தி வழிபாட்டின் முக்கிய விழாவாகக் கொண்டாடப் பெறுகின்றது.

நவராத்திரியின் மகத்துவத்தைப்பற்றி பூர்வ காலந்தொட்டு புராணக்கதைகள் பல வழங்கி வருகின்றன. அக்கதைகளை ஒவ்வொன்ருகக் கூறி வாசகர்களுக்குச் சிரமங்கொடுக்காது மிகப் பிர தானமாக உள்ள மகிடாசுரனது கதையின் தத்து வத்தையும், சுகேதன் என்ற மன்னனது கதையின் தாற்பரியத்தையும் மாத்திரம் சிறிது ஆராய்வாம்.

பொதுவாகப் புராணக்கதைகள் யாவும் எடுத் துக்கொண்ட விடயத்தின் குறிக்கோளை அடிப் படையாக வைத்து மூடமதி படைத்தோர்க்குப் பஞ்சதந்திரக்கதை போன்ற சிறுச்சிறுக் கட்டுக் கதைகள் மூலம் புத்திபுகட்டிச் சிறந்த அறிஞர்க ளாக்குதல்போல அக்கால ஆன்ருேர் மக்களை நல்வழிப்படுத்தற்கு வேண்டிய உலகியல் நீதி, அறநெறிப் போதனைகள், நிலநூல், வானநூல், கணிதநூல், மருத்துவநூல், சிற்பநூல், முதலிய அனைத்தையும் அக்கால இயல்புக்கேற்கத் தங்கள்

பிற்சந்ததியினருக்குக் கதைவடிவிற் கூறினுற்ருன் அவற்றை எளிதிற் கிரகித்து உண்மைப் பொருள் களை உணர்ந்து ஒழுகுவார்கள் எனக்கருதி அதற் கேற்ற கட்டுக்கதைகளைப் புனைந்து கூறி அவை மூலமாக அறிவூட்டி வந்துள்ளனர். ஆகவே நாம் அக்கதைகளில் அமைந்திருக்கும் உண்மைத்தத்து வங்களை மாத்திரம் கிரகிப்பதை விடுத்து அக் கதைகளை நிசமானவை எனக்கொண்டு மலைவுறு தல் சிறப்பாகாது.

எனவே முதலாவது மகிடாசுரன் கதையைப் பார்ப்போம். ''எருமை முகத்தையுடைய மகி டாசுரன் என்பவன் மிகுபலசாலியாயிருந்து தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கு இடுக்கண் விளைத்து அடக்கி ஆண்டான். ஒருமுறை அவ னது ஏவலாளர் உணவுக்காக மிருகங்களை வேட் டையாடிக்கொண்டுவரக் காட்டுக்குச் சென்றனர். அக்காட்டிலே தவஞ் செய்துகொண்டிருந்த தேவர் கள் அவர்களைக் கொன்று விட்டனர். இதை மகிடன் அறிந்து படைகளுடன் போய்த் தேவர் களுடன் போர்பொருதினுன். இதனை உமாதேவி யார் அறிந்து துர்க்கா தேவியையனுப்பி அவனைக் கொல்லும்படி ஏவினர். துர்க்காதேவியும் கோபா வேசம்மிக்க கோரவடிவுடன் சென்று தனது சக் கரப்படையினுலே அவனது தலையை அறுத்தனர். உடனே அவன் யானையானுன். யானையை அழித் ததும் குதிரையானுன், குதிரையையும் அழிக்க நெருப்பானுன். இப்படியே மாறிமாறிப் பலவித உருவங்களைக் கொண்டான். இறுதியாக இனைப்

பெய்தியவனுய்ப் பழையபடி எருமைத்தலையுடன் தோன்றினன். அதைக்கண்ட துர்க்காதேவி மேலும் சினங்கொண்டு அவனைக்கொன்று அவனது தலையைத் தமது திருவடியால் மிதித்தனள். அப்பால் வேறுவடிவங் கொள்ள இயலாது அடங்கி பின்னர் நற்கதி அடைந்தான்.'' இதுவே ஒன்று; இன்னுமொன்றை மாத்திரம் தருவாம்.

''கிரேதாயுகத்திலே அறிவாலும், பத்தியாலும் சிறந்த சுகேதன் என்னும் ஓர் அரசன் இருந்தான். ஒருநாள் அவன் தனது இராச்சியயத்தை இழந்து யாதொருகதியும் அற்றவனுய் இனிமேல் உலகில் தங்களுக்குத் தவமேயன்றிப் பிறிதொன்றும் உறுதுணையாகாதெனத் திடங்கொண்டவனுய் மனைவியையும் உடன்கொண்டு தவஞ்செய்வான் கருதி வனத்துக்குச்சென்று தவத்தை மேற்கொண்டிருந்தான். ஆங்கொருநாள் ஆங்கீரசர் என்னும் முனிவர் அரசனையும் மனைவியையும் சந்தித்து தேவிபூசையிற் சிறந்த நவராத்திரி விரதத்தின் மகிமையையும், அதனை அனுட்டிக்கும் முறையையும் உபதேசித்தார். அதுகொண்டு அரசனும் மனைவியும் நவராத்திரி விரதத்தை உரியகாலத்திலே முறையாக நோற்று தேவியின் திருவருளைப்பெற்று அப்பால் தான் முன்னே இழந்த இராச்சியத்தை மறுபடியும் பெற்றுச் செவ்வனே வாழ்ந்திருந்தான்.'' இவ்வாறு தேவியின் ஒப்பற்ற கருணையை உணர்ந்தே ஆண்டுதோறும் அத்தினத்தை ஓர் வெற்றிநாளென மதித்து அவளது நவராத்திரி விரதத்தினை அனை

வரும் அனுட்டித்து வருவாராயினர். இவையே முன்னர்க் கூறிய புராணக் கதைகள். இவற்றில் முதலாவது கதையில் தேவர்களுக்கும் அசுரருக்கு மிடையே நிகழ்ந்தபோரும் தேவியின் திருவருட் திறனும் விவரிக்கப்படுகின்றது. இங்கே தேவர்கள் என்று கூறப்படுவது ஆன்மாக்களையும், அசுரர் எனக்குறிப்பிடுவது ஆன்மாக்களை வருத்துவதாகிய மும்மலப் பிணிகளையுமென்க. எனவே மலவாதனையினுல் மயங்கி அறிவிழந்த ஆன்மாக்கள் கடவுளை ஒருபொருளாக மதியாது தங்கள் மதிகெட்டு நடத்தலையும், மலத்தின் சத்திகள் ஒவ்வொன்றினதும் ஆற்றல் கெடக்கெட வேறு வேருக ஒவ்வொன்று தோன்றி ஆன்மாக்களுக்கு முனைப்பைக்கொடுத்து ஏவுதலையும் இறுதியாக மலத்தின் வல்லமைகள் யாவும் ஒடுங்கியபின் சிவசத்தியின் திருவடி அடைதலாகிய (சத்திநிபாதப்படிவு) மெய்ஞ்ஞானத்தைப் பெற்று உய்தலையும் விளக்கி நிற்றல் காண்க.

இனி இரண்டாவது கதையோ தேவியை உள்ளன்போடு உபாசிப்பவர்களுக்கு தரியாதிரங்கி வெளிப்பட்டுத்தன்னருள் வழங்குதல் சரதம் என்பது. இக்கதையின் தத்துவ உண்மை இவ்வாருகக் கதைகளை நிசமானவை எனக்கருதல் ஒவ்வாதாம். பராசத்தியாகிய தேவியின் முக்கிய தினம் நவராத்திரியே. ஆதலால் சத்தியின் மாண்பு அதன் தத்துவ உண்மைகளைக் குறித்தும் சிறிது ஆராய்தல் பொருத்தமாகும்.

நாம் காண்கின்ற இப்பரந்த உலகில் எத்தனையோ கண்கொள்ளாக் காட்சிகளை நிறைய நிறையக் காண்கின்றோம். அவற்றுள் மனிதசமுதாயம் மிக உயர்ந்தபடியாக விளங்குகின்றது. அம்மனிதர் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிகின்ற பகுத்தறிவைப் பெற்றுள்ளமையால் மற்றைய சீவர்களிலும் பார்க்க மிக மேம்பட்டவர்களாக மதிக்கப்பெறுகின்றனர். பொதுவாக மனித இயல்புக்கு மேற்பட்டவைகள் யாவும் தெய்வ இயல்பென்றே சொல்லுவார்கள். மனித வருக்கத்தினருள்ளும் தமிழர்களே மிகப்பூர்வீக நாகரிக மக்களாகத்தோன்றி விளங்கினுர்கள். பல துறையிலும் அவர்களது அறிவும் செயலும் படிப்படியே வளர்ந்து விசாலிக்கத் தொடங்கியது.

அங்ஙனமாக, அவர்கள் இயற்கையின் தத்துவத்தைக் கூர்ந்து ஆராய முனைந்தனர். தாம் கண்ட இயற்கைப் பொருட்களின் மூலமாக உலகங்கள் அனைத்தையும், அதாவது விரிந்த ககன வெளிக்குள் சஞ்சரிக்கும் மற்றனைய அண்டகோடிகளையெல்லாம் அணுவும் பிசகாது இயக்கிக் கிரமந்தவருது சஞ்சரிக்குமாறு நடாத்தி வருகின்ற ஏதோ சிறந்த சக்தி ஒன்று இருப்பதை உன்னி உன்னி உணர்ந்தார்கள். இத்துடன் நில்லாது மேலும் நுணுகித்தம் அறிவைச் செலுத்திய விடத்து இன்னும் ஓர் புதுமை தோன்றக் கண்டனர். எங்ஙனமெனின்; ஓர் சின்னஞ்சிறிய ஆலம் வித்துக்குள்ளே மிகப் பென்னம் பெரிய ஆலமரம் வளர்வதற்கான அற்புத மிகுந்த சிருட்டி சக்தி

ஒன்று இருப்பதையும், அவ்வளவு சத்தியும் அதற்குள் அடங்கி ஒடுங்கி இருக்கின்ற அற்புதத்தையும் கண்டு கண்டு வியப்பெய்தினர். மேலும் மரங்கள் செடிகொடிகளாதிய எல்லாம் தத்தம் இனங்களைவிட்டு சிறிதும் மாற்றமுருது தளிர்ப்பதும், பூப்பதும், காய்ப்பதும், கனிவதுங்கண்டு இவ்வாறே ஒவ்வொரு மரஞ்செடி கொடிகளுக்கு உள்ளிருக்கும் இரசாயன விந்தைகள் அற்புத மயேந்திரசாலங்கள், சிற்ப மர்மங்கள் ஆதியவற்றை எல்லாம் கண்டு கண்டு ஆய்ந்து ஆய்ந்து அளவிலா ஆனந்தங் கொண்டனர். அத்துடன் அந்தந்த மரஞ்செடிகொடிகளெல்லாம் தத்தம் சாதிக்குரிய பூக்களைப்பூத்து அததற்குரிய காய்களைக் காய்க்கின்றனவே அவைகளில் எதுவேனும் தப்பித்தவறி ஓர் இனம் மற்ருேர்சாதிப்பூவை அல்லது காயைத்தானும் காய்ப்பதைக் கண்டிலேமன்ருே? இது மட்டுமா ஓர் ருேசாத்தண்டை நட்டதும் அது தழைத்து இலைகளெறிந்து படர்ந்து அழகான பூக்களைப் பூத்து நல்ல வாசனையையும் வீசுகின்றதே! இது யார்செய்த விந்தை? இத்தகைய அற்புதங்களை இத்தண்டுக்குள் செலுத்தி விளையாடுவது யார்? இப்படி அளவிட்டுக் கூற முடியாத ஒரு அதிசய சத்தியும் உயிர்த்தத்துவமும் இருந்து கொண்டு அவைகளை இயக்குவதையும் நன்கு கவனித்தார்கள்.

அப்பால் அவ் இயற்கைச் சத்தியானது ஏதொரு உருவமும் கற்பித்துக் கூறமுடியாதவாறு

என்றும் மறைவாய் அருவநிலையில் ஒளிவடிவில் ஒழித்து விளங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு ஏதொன்றுமற்ற சூனிய நிலையில் விளங்குந்தன்மையில் அப்பொருளை இயற்கை, இறை, இயவுள், கடவுள் எனப்போற்றிப் புகழ்ந்து பாடிப்பரவினர். அங்ஙனம் அற்புதமயமான அச்சத்தி அருவவடிவாயிருப்பதை அறிந்த திருமூலயோகிகளும்,

"இருட்டறை மூலையில் இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடக்குறித்து
குருட்டினை நீக்கிக் குணம்பலகாட்டி
மருட்டி அவனை மணம்புரிந்தாளே!"

என்று கூறியதற்கமைய அருவநிலையில் வைத்து வழிபாடாற்றிய தலை உலகமக்களாகிய இவர்களை (தமிழரை) அருவர் எனவும், அருவ + ஆளர் = அருவாளர் எனவும் தொன்றுதொட்டு அழைத்து வந்தனர். இவ்விரு பெயர்களும் பண்டைத் தமிழர்க்கே வழங்கி வந்ததைப் பழைய இலக்கிய வாயிலாகவும் அறிகின்றோம்.

மேற்காட்டிய பொருளையும் அதற்குள்ளிருந்து உருச்செய்கின்ற சத்தியையும் நுணுகிக் கண்டு கொண்டதுடன் அவை இரண்டும் ஒன்றை ஒன்று நீக்கமறத்தழுவிப் பின்னிப்பிணைந்திருக்கும் இந்த அருமையான அழகினையும் கண்டு மகிழ்ந்த மகிழ்ச்சிப் பெருக்கால், அன்பின் அளவிலாத் துடிப்பால் அவ்விருவருக்கும் பலபல பெயர்களும் சொல்லிப்புகழாமல் மறந்திருக்க முடியவில்லை. ஆகவே அருவமாகிய ஒளிப்பொருளை ஒளியின்

சிவப்பு நிறம்பற்றி சிவம் எனவும் அதற்குள்ளி ருந்து உருச்செய்யும் சத்தியை சிவை அல்லது மேன்மேலும் கூர்ந்து கூர்ந்து நுணுகி நுணுகி ஆய்ந்து ஆய்ந்து அறிந்து கொண்டமைக்கமைய ஆய் எனவும் அழைத்தனர். இன்னும் நில உலக மாகிய இப்பாரின்கண் நாம் காண்பன அனைத்தி லும் பரந்து விளங்கும் முதன்மைப் பொருளாத லால் அப்பொருளினைப் பரன் என ஆண்பாலி லும்; அப்பாரிலுள்ள பொருள்களுக்குள் புகுந் திருந்து உருச்செய்கின்ற சத்தியை (பாரில்வதிந்து பரவியிருக்கின்ற தன்மையில்) பார் + வதி = பார் வதி அல்லது பரை எனப் பெண்பாலிலும் வைத்து அழைக்கலாயினர். உலகப்பொருள்கள் அனைத்தி லும் வதிபவள் ஆதலால் அவளைப் பார்வதி என அழைத்தமை மிகப் பொருத்தமானதே. பர்வத ராசன் புத்திரி என்றதால் பார்வதி எனவும் கொண்டனர் ஆன்றோர். இவ்வாறு பாதி பெண் ணும் பாதி ஆணுமாக என்றும் ஒளிர்வதால் அர்த்தநாரீஸ்வரன் என்றும் கூறினர்.

அதனால் இந்த இரண்டு வகையாகிய நாதம்-விந்து என்கின்ற பொருளும் சத்தியும், சத்தனும் சத்தியும் என்கின்ற ஒலியும் ஒலிக்குறியும் வட்ட மும் கீறும் பிள்ளையார் சுழி என்கின்ற O + — = உ—ஒ ஓம் என்னும் நாதவடிவைவட்டமான சேமக் கலத்திலும், விந்துவடிவை நாதத்தை எழுப்பும் தடிக்கம்பினை ஒப்பக்கொண்டு சுழியும் கீறும் கூடிய பிரணவமாய் ஆணும் பெண்ணுமாய் அண்டசராசர

மெங்கும் வியாபித்துக் கண்ட பொருள்கள் அனைத்தையும் ஆக்கி, அவை ஒவ்வொன்றிலும்கலந்திருந்து காட்சிதரலால் பரனும் பரையுமாகி, கிழவனும் கிழத்தியுமாகி, அப்பனும் அம்மையுமாகி, ஐயனும் ஐயையும் ஆகி, சிவனும் சிவையுமாகி, அரனும் அரியுமாகி விளங்கியமையுடன் அவ்விருவரது நிறங்களையுமோ முறையே வெண்மையும், கருமையுமாயும், செம்மையும் பச்சையுமாயும் விளங்கி ஒளிர்வதையும் கண்டு கொண்டனர்.

இவ்வாறு தாம் இயற்கையின் துணைகொண்டு மிக நுணுகி ஆய்ந்து அரிதிற்கண்டு கொண்டதாகிய இம் மகத்தான பொருளையும் மாபெரும் சத்தியையும் சிவமும் சத்தியுமாகக் கொண்டு அவ்விருவரையும் இணைத்து அவைக்குத் திருமணமும் செய்து வைத்து, அண்டசராசரங்களை எல்லாம் ஈன்று காத்திரட்சிக்கின்ற அவ் அற்புதக் காட்சியின் பொலிவினைக் கண்ணுரக்கண்டு களிபேருவகை அடைந்து அளவிலா ஆனந்த வாழ்வு வாழ்ந்து போயினர்.

இவ்வாறு சிவமும் சத்தியுமாகிய இரண்டும் ஒன்றை விட்டொன்று பிரியாது ஒன்றேடொன்று நீக்கமறப் பிணைந்திருப்பதாகக் கண்டு கொண்ட காட்சிதான் உலக தோற்றங்கட்கும் ஒடுக்கங்கட்கும், அவை ஒவ்வொன்றும் தத்தம் நியதிக்குரிய நிலைதவறு இயக்கங்கட்கும் காரணமாய் உலகெங்கும் மிக மங்களமளிப்பதாய் அறிஞராற் கொள்ளப்பட்டது. ஆளனும் ஆயுமாகி நின்ற அவ்

ஆண்டவனது இயல்பான இறைமைக்குணக்காட்சி இதுவே அன்றோ? இவ்வற்புதக்காட்சிதான் சிவன் சிவை என்னுமிருவரதும் மங்கலக்காட்சி. அவ் விருவரதும் திருமணக்காட்சியின் பொலிவு இது வன்றோ? இத்தகைய திருமணக் காட்சியின் சிறப் பைப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னிருந்த நம் முன்னோர் பலபடியாகக் கண்டு உண்மையின் ஒளிர்வை உள்ளவாறறிந்து அளப்பரும் இன்பத்தை நுகர்ந்து அதை என்றும் மறக்கமுடியாத ஆனந்த பரவசத்தராய் அம்மையப்பா! அர்த்தநாரி ஈஸ் வரா! வல்லியப்பா! மங்கைபங்காளா! ஏழைபங் காளா! என்றெல்லாம் சொல்லிச் சொல்லி வாயார வாழ்த்தி மனமாரப்போற்றி ஆரா அன்பினுல் ஆடியும் பாடியும் ஆராதனை செய்து வந்தனர். இவ்வாறு அகண்ட வடிவில் போற்றுவதோடு நின்று விடாது அவரது இறைமைக் குணங்களுக் கேற்ற திரு உருவங்களை தயாரித்து அவ்வுருவங் களிலே இறைவன் எழுந்தருளி இருப்பதாகவும் கருதிப் போற்றி வாழ்ந்தனர்.

இம்மட்டோடு நிறுத்திக் கொண்டார்களா? இல்லை இல்லை, அறிவிற் குறைந்த நிலையிலுள் ளார்க்கும் ஆண்டவனது அற்புத லீலைகளின் மாண்பினை விளக்கி அளவிட்டுக் காட்டும் வகை யில் மானைக்காட்டி மான் பிடிப்பார் போன்று இறைவனது லீலைகளின் திரு உருவங்களை நல்கி வழிப்படுத்துவான் வேண்டி ஆகாயமளாவிய ஆலயங்களை எழுப்பி அதிலே இறைவனது திரு விளையாடற் காட்சிகளை அமைத்தும் உள்மூலத்

தானத்தில் சிவன் சிவையாகிய இருவரதும் அற்புதத் திரு உருவங்களை (கூத்தப் பெருமாஞகிய நடராச மூர்த்தியை) அமைத்து வைத்தும் கண் குளிரக்காட்டி வாயார வாழ்த்தி அன்பாரப் போற்றி அவரருள் பெற்றுய்ய வைத்தனர்.

மேலும் அவ்விறைவனைப் போற்றும் முறையில் சோதிவடிவினன் எனக்கொண்டு தத்துவ முறையின் படித்தரங்களை விளக்கும் முகமாக பலவித விளக்குகளை அமைத்து நெய்த்திரி கொளுத்தியும் கற்பூரதீபங்காட்டியும் உபசாரங்கள் செய்து பூசிக்கலாயினர். பின் வந்த சமய குரவர் மற்றும் அடியார்கள் யாவரும் அச்சோதியினையே பாடிப்பரவலாயினர்.

இன்னும் அச்சத்தியின் பெயரில் அமைந்துள்ள மந்திரதத்துவத்தையும் அதன் மாண்பினையும் ஓரளவு ஆராய்வாம். தொன்றுதொட்டு இன்றுவரை வழங்கிவரும் சத்தியின் பெயர்களுள் ஒன்ருகிய ''உமா'' என்னும் பெயரில் ஓர் அற்புத கருத்தமைதி விளங்குவதைக் காண்கின்ரும். எங்ஙனமெனில்; சிருட்டி திதி லயம் என்னும் தோற்றம், நிலைப்பு, ஒடுக்கங்களுக்கு மூலமாகிய பிரணவ மந்திரத்தில் அமைந்துள்ள பீசாட்ச்ரங்கள் அகர உகர மகரம் என்னும் மூன்றுமாம். இம் மூன்றெழுத்தும் சேர்ந்தே அ + உ + ம் = ஓம் என ஒலித்து பிரணவமாயிற்று.

இம் மூன்று எழுத்துகளுக்கும் உலகதோற்ற நிலைப்பு ஒடுக்கங்களைக் குறித்துச் செயற்படுங்கால்

நிலைமாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. அப்படி மாறுந்தோறும் தோற்றச் செயல்களை அகரத்தினை முதலாகக்கொண்டு அ + உ + ம் = ஓம் எனவும்; நிலைப்பு (காப்பு) ஒடுக்கம் என்கின்ற இரண்டினையும் புரியும்போது உகரத்தை முதலாக வைத்து உ + ம் + அ = உமா எனவுங்கொண்டு மகரம் ஒடுங்குமிடமாதலால் அதனை இரண்டுக்கு நடுவாகவும் வைத்து இயங்குமாறு வழங்கிவந்துள்ளனர். ஆகவே உ + ம் + அ = உமா என வரும்போது சத்தியாகிய உகரத்தை முதலாகக் கொண்டமையால் உமையம்மையாரின் பெயராக அமைந்துள்ள பெருமையைச் சிறப்பித்துத் திருமூலர் திருமந்திரத்து:—

ஓங்காரமென்னும் அவளொருபெண்ணும்
நீங்காத பச்சை நிறமது கந்தவள்
ஆங்காரமுடன் ஐவரைப் பெற்றவள்
ரீங்காசனத்தில் இனிதிருந்தாளே,

எனக்கூறியுள்ளார். இந்தப்பிரணவமாகிய ஓங்கார மந்திரமானது மற்றெல்லா மந்திரங்களுக்கு மூலமாயும், அவை அனைத்தும் அடங்குமிடமாகவுங் கொண்டு விளங்குகின்றது. அது எது போல எனில்; சமுத்திரத்திலேயுள்ள நீரானது கதிரவனது காங்கையினால் ஆவியாகி மேல் எழும்பி ஆகாயத்தில் மேகமாகப் படிந்து, பின்னர்ப் பூமியில் மழையாகப் பொழிந்து ஆறுகளாக ஓடச்செய்து அப்பூமியை வளமுடைத்தாக்கி மறுபடியும் அந்த நீரானது சமுத்திரத்திலேயே வந்து அடங்குதல் போல அப்பிரணவ மந்திரமும்

அமைந்து விளங்குவதைக் காணலாம். மதிரங்களுக்குத் தலையாகிய அப்பிரணவத்தில் உலக தோற்ற நிலைப்பு ஒடுக்கங்களைக் குறிப்பதாகிய உ+ம்+அ, என்ற அட்சரங்கள் மூன்றும் சேர்ந்து உமா எனத் தோன்றுமாறு அமைத்துக்கொண்ட நம்முன்னோர் பெருமை எமக்கு எத்துணை வியப்பைத் தருகின்றது.

இந்த அற்புத உண்மையின் பெருமையை அறிந்தே அறிவிற்சிறந்த சித்தர்கள் ஞானிகள் கூட தங்கள் பக்குவ நிலையின் தரம் மிகக் குறைவாக இருப்பதைக் குறித்தற்கு எட்டும் இரண்டும் அறியாத ஏழை என்று கூறியுள்ளார்.

பிரணவத்தில் அமைந்துள்ள பிரதான அட்சரங்களாகிய அகரத்தையும் உகரத்தையும் தமிழரது எண்களிற் பாவிக்கப் பெறும் எட்டு என்ற எண்ணைக் குறிக்கும் ''அ'' எழுத்தையும், இரண்டு என்ற எண்ணைக் குறிக்கும் ''உ'' என்ற எழுத்தையும்கூட்டி சத்தியும் சிவமுமாகவும், பீடமும் இலிங்கமுமாகவும் கொண்டு பிரணவத்தின் தத்துவத்தையும் அது தேவியின் அம்சமாக அமைவதையும் விளக்கியுள்ளனர். இதனை உண்மை விளக்க நூலிலும்:—

''என்றும் பயமறவே ஈரெழுத்தும் ஒரெழுத்தாய்
நின்றசிவ லிங்கத்தை நெஞ்சேகேள் - உண்டுறங்கித்
தேசமெலாந் நின்றசைந்த தீயெழுத்தே லிங்கம்காண்
ஆசைவிந்தே நாவெழுத்தே ஆவிடையார்''

என்று கூறுவதைக் காண்க. இன்னும் அப்பிரணவத்தின் மூல எழுத்தாகிய அகரம் அம்மையாராகிய சத்தியையும், உகரம் அப்பனுகிய சிவத்தையும், மகரம் அனைத்தும் ஒடுங்குமிடத்தையும் குறிப்பது காண்க. இன்னும் உலக கர்த்தாவாகிய சிவன் ஓர்கணமேனும் ஆறுதலின்றி சிருட்டியாதி தொழில்களை நடாத்தி அனவரதம் ஆடிக்கொண்டு அவ்வாட்டத்தை உமையம்மையாரும் உடனிருந்து கண்டானந்திக்கக் கூடியதாக சதா ஆடிக்கொண்டே இருக்கின்றார் என்ற நம் முன்னோரறிந்த இவ் அற்புத உண்மை எத்துணை வியப்பைத் தருகின்றது. இதனலே தான் இவர் கூத்தப்பெருமான் (நடராசமூர்த்தி) என அழைக்கப் பெற்றார்.

இவர் கூத்தப்பெருமாளுக ஒற்றைக்காலில் நின்று ஒருகணமேனும் ஆறுதற்கு நேரமின்றி ஓயாது ஆனந்த நடனம் ஆடிக்கொண்டே இருக்கின்றார், சர்வசராசரங்களையும் கூட்டியும் குலைத்தும் ஆட்டியும் அலைத்தும் சதா ஆட்டிக்கொண்டு இருக்கின்றார் என்பதையுமே தேவாரத்தில்,

"ஆட்டுவித்தா லாரொருவர் ஆடாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணுதாரே—"

என்றும், திருவாசகத்தில்: பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடி? பெண்பாலுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர் விண்பாலியோகெய்தி வீடுவர்காண்சாழலோ! என்றும் கூறி உண்மையை உபதேசித்தருளினர்.

இவ்வாறு அரிய உண்மைகளை ஆய்ந்துகண்ட உரவோர் பின்னரும் ஆயத்தொடங்கி அணுவுக்கும் அப்பாற்பட்டதாகிய அச்சிவத்தையும் உடன் உறைந்திருக்கும் சத்தியையும் கண்டு கண்டு ஆனந்தித்த பரவசமேலீட்டால் அந்த இரண்டு பெரும் பொருளுக்கும் திருமணம் செய்துவைத்து அம் மணக்கோல மாண்பினை யாங்களுங் கண்டு களித்தனர். மகிழ்ந்து மகிழ்ந்து இடையறு இன்பந் திளைத்தனர் என முன்னே சொன்னேம். இம்மகத்தான உண்மைத்தத்துவ இரகசிய மணக் கோலக்காட்சியையே உலகம் சரிந்த காலத்தில் சிவபெருமான் அகத்திய முனிவருக்குக் காட்டியருளியதாகப்புராணக் கதைகளும் புகட்டியுள்ளன.

இந்தத் தத்துவத்தை அடிப்படையாக வைத்தே சிவபெருமான் உமையம்மையை ஓர் பாகத்தில் வைத்து உவந்து கொண்டனர் என்ற கதை மூலம் உலகில் எந்த ஒரு ஆண் பெண் சையோகமின்றி உலக உற்பத்தி தோற்ற வியாபகம் நிகழமாட்டாது என்ற உண்மையை அடிப்படையாக வைத்தே சங்ககாலப் புலவர்கள் கூட தாம்பாடிய பாடல்களை அகப்பொருட்டுறையில் யாத்து தலைவன் தலைவியர்களது களவு கற்பு என்னும் காதலொழுக்கப் பண்பு வாயிலாகத் தெளிவு பெற விளக்கியுள்ளனர். கந்தபுராணத்தின் கருப்பொருளும் அதுவேயாம். இவ்வுண்மையை அறிந்திருந்தவராகிய திருமூலயோகிகளும் தமது திருமந்திரத்து.

" ஓங்காரமென்னும் அவளொரு பெண்ணும்
நீங்காதபச்சை நிறமது கந்தவள்
ஆங்காரமுடன் ஐவரைப் பெற்றவள்
றீங்காசனத்தில் இனிதிருந்தாளே ! ,,

" இருட்டறை மூலையில் இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடக் குறித்து
குருட்டினைநீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி அவனை மணம்புரிந்தாளே ! ,,

" இட்டானறிந்திலன் ஏற்றாளுங்கண்டிலள்
தட்டானறிந்தா னொருவர்க் குரைத்திலன்,,

எனவும்கூறி, சிவம் சக்தியாகிய இருவரது தோற்ற ஒடுக்க நிலைப்பு முறைகளையும், உலக சிருட்டி கிருத்தியச்சிறப்பினையும் அவர்களது நிறங்களின் தன்மைகளையும், திருமணக் கோலச் சிறப்பினையும் தெள்ளத் தெளிய வாரி வழங்கியுள்ளார்.

இத்தகைய அறிவிற்சிறந்த ஆன்றோர் பாடல்களுக்கு இருவகைப் பொருள்கள் உள்ளன. ஒன்று செம்பொருள் மற்றது குறிப்புப் பொருள். செம்பொருளாவது — எவர்களும் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு பொருள்கொள்ளத் தக்கதும் சிறிய கதைவடிவில் உலக நிகழ்ச்சிகளைத் தழுவி அமைத்துப் பொருள்புகட்டி விளக்கத்தக்கதும். குறிப்புப் பொருளாவது — ஆழ்ந்த அறிவுள்ள ஞானிகள் மாத்திரம் உணர்ந்துணர்ந்து சுவைத்துக் கொள்ளக்கூடிய நுண்கிடையான உண்மைத் தத்துவக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாக

அமைத்துப் பாடப்படுவது. ஆகவே திருமூலரது திருமந்திரச் செய்யுள்களுக்கும் அவ் விருவகைப் பொருள்களும் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

சத்தியின் வடிவம் பச்சையும்; சிவத்தின் வடிவம் வெண்மையு மென்பதாம். உலகில் நாம் காணும் தோற்றங்களனைத்திலும் சிவம் சத்தியாகிய இருவரது கூட்டுறவையும் உணர்ந்து கொள்ளுகின்றோம். ஒவ்வொரு பொருளிலும் பாதி சத்தியும் மற்றப்பாதி சிவமுமாம். அதனுலன்றோ? சிவபெருமானைக் குறித்துச்சத்தியையும் புகழுமிடத்து! அம்மையப்பன், வல்லியப்பன், அர்த்தநாரீஸ்வரன் ஏழை பங்காளன் என்றெல்லாம் அழைத்தனர் நம்முன்னோர். அர்த்தம் = பாதி. நாரி = பெண். அர்த்தநாரிஈஸ்வரன் = பாதி பெண்வடிவோடு கூடிய சிவன் என்பது காண்க. இவற்றைச் சிவஞானசித்தியாரில்:

"சத்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார்பீட இலிங்கத்தின் இயல்பு மோரார்."

"சத்திதான் நாதமாதி தானுகும் சிவமுமந்தச்
சத்திதானுதி யாகுந் தரும்வடி வானஎல்லாம்
சத்தியும் சிவமுமாகும் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாம் சத்தன் வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே!"

என விளக்கியவாற்ருலும்; ஸ்ரீ சகக்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் பாடியருளிய "சௌந்தரிய லகரி" மொழி பெயர்ப்பு நூலில்:—

"சிவமெனும் பொருளு மாதிசத்தி யொடு சேரினெத் தொழிலும் வல்லதாம்
இவள்பிரிந்திடில் இயங்குதற் குமரிதரிதெனுமறை யிரைக்குமால்
நவபெரும் புவன மைவகைத்தொழில் நடத்தியாவரும் வழுத்து தாள்
அவனியின்கணொரு தவமிலார்பணியலாவதோ பரவலாவதோ?"

என்றும் கூறிய உண்மைக் கூற்றுக்களாலும் சிவனவர்கூட சத்தியுடன் கூடினாற்றான் எத்தொழிலையும் செய்ய வல்லவராவர். சத்தி இன்றி ஏதொன்றும் சித்திக்கமாட்டாதென்பது தெளிவு. திருவருட்பயன் என்ற நூலிலும்:—

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி
பின்னமிலானெங்கள் பிரான்"

என்று கூறப்பெற்றுளது. ஆகவே அச்சத்தியின் இன்றியமையாப் பெருமையை எடுத்துக் கூற முயன்ற ஆன்றோரே அச்சத்தியானவள் ஆன்மாக்களது ஈடேற்றங் கருதி சதா பஞ்ச கிருத்தியங்களை நடாத்தியும், மற்றும் அண்டகோடிகள் அனைத்தையும் உருப்படுத்தித் தமது திருவிளையாடல்களாக அவையாவும் இந்தக் ககன வெளிக்குள் தத்தம் நிலைதவறாது குறித்த எல்லைநியதி கால வரையறைக் கூடாகச் சஞ்சரிக்கக் கூடியதாகவும் அமைத்து, என்றும் உலகமக்களனைவராலும் போற்றப் படுபவளாகின்றாளன்றோ? எனவே சிவத்தின் செயல்களுக் கெல்லாம் தானே ஒப்பற்றதுணையாய் அமைந்த அத்தேவியின் பாதார விந்தங்களைச் சேவிக்கும் பாக்கியம் பெறுதவர்கள் அவளது உண்மைத் தத்துவமாகிய புகழை உணர்ந்து பாடவா

வது பரவவாவது முடியுந்தரமல்லவே! என்று அறுதியிட்டு அறிவுறுத்துவதையும் அறிந்துகொண்டோமல்லவா?

இன்னும் அச் சத்தியோ மிகு இரக்கமுடையவள். ஆன்மாக்களது துன்பங்களைக் கண்டு சற்றும் சகிக்க மாட்டாதவளாய் கணமேனுந்தரியாது விரைந்தருளுந் தன்மை மிக்குடையவளாயிருக்கின்றாள். இவ்வாறு சத்தியின் இரக்கப்பண்பின் பெருமையைக் காட்டவன்றோ மணிவாசகப் பெருமானாரும் தமது திருவாசகத்தில்:—

''பால் நினைந்தூட்டும் தாயினும்சாலப் பரிந்துநீ பாவியேனுடைய ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே.''

என்று மிகுபரிவுடன் பரவலாயினர்.

அன்றியும் சீர்காழியிலே திரு ஞான சம்பந்தக் குழந்தையின் அழுகைக்குரலுக்கு இரங்கி வெளிவந்து தமது திருமுலைப்பாலோடு ஞானப் பாலையும் ஒருங்கேகலந்து ஊட்டி ஆண்டதாகிய உளங்கனிந்த செயலினாலும் அவளது கருணைத் திறம் ஒருவாறு அறிதற்பாலது.

மேலும் சத்தியும் சிவமும் ஒருவருக்கொருவர் தம்முட்பேதமின்றி ஓர்வடிவில் இருந்தபோதிலும் திருஞானசம்பந்தக் குழந்தைக்குத் தம் பொருட்டாகக் காட்சிதந்தருளிய தோற்றத்தில் அச்சத்தியின் வடிவமே, தாம் பால்குடித்த ஞான்று தோற்றியமையாலும் அச்சத்தியானவள் **காதில்**

அணிந்திருந்ததோடு தாரக மந்திரம் என்னும் பிரணவாகிருதியாகக் காட்சியளித்தமையாலும் அதனை ஒருசிறிதும் மறக்கமுடியாது தாம்பாடிய தேவாரத் திருப்பதிகத்தில் சத்தியை முதற்கண் உணரவைத்து பிரணவமாகிய வட்டவடிவில் பிரணவத்து அட்சரங்கள் செறிந்தவாறு தோட்டினைச்சுற்றிக் கற்கள் பிரகாசிப்பப் பிரணவத்தை வலியுறுத்தி அத்தோட்டினையே தேவாரத்து முதலடி முதற்சொல்லாகக் கொண்டு; ''தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண்மதிசூடி'' என்று பாடியருளினர். அம்மையார் அவருக்குத் திருமுலைப்பால் ஊட்டியபோது அவரது காதில் அணிந்திருந்த தோட்டின் பொலிவு அவரால் மறக்கமுடியாத சிறப்பு வாய்ந்திருந்தமையாலன்றோ? அம்மையாரது தோட்டினை முதலெடுத்தோதினர். இதன் உட்பொருள் யாதெனின்; பிரணவமந்திரோபதேசவாயிலாக ஞானப் பாலை ஊட்டி உய்விக்கத் தொடங்கினர் என்பது. இவ்வாறு சத்தியின் இன்றியமையாப் பெருமையையும் முதன்மையையும் பாராட்டும் வகையில் மணிவாசகப் பெருமானும்; '' அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!'' என்றும் திருவருட்பிரகாச வள்ளலார் ஆகிய இராமலிங்கசுவாமிகள்; ''அம்மையே என்னப்பா என் ஐயா என் அரசே!'' என்று பல இடங்களில் கூறினர். தமிழ்மூதாட்டியாரான ஔவையாரோ; ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்றார்.

''அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு.''

என்று வள்ளுவரும் கூறித் தந்தையிலும் பார்க்கத் தாயே சிறப்புடையவள் என்னும் உண்மையினை உலகுக்குக் காட்டத் தாயையே முதலாக வைத்துப் பாடலாயினர் என்பதும் வெளிப்படை. இவ்வாறு சத்தியின் முதன்மையை விளக்கும் ஆன்றோர் கவிதைகள் அளப்பில. விரிக்கிற் பெருகும். பொதுவாக உலகநடையிற் பார்க்கும்போதும் ஓர் சிறுவன் தன் தாயிடம் நெருங்கிப் பழகுவது போன்று தந்தையிடம் அவ்வாறு பழகுகின்றானில்லை. ஏனெனில் எவ்வித குற்றங்களையும் தாயானவள் சகித்துக்கொள்வதோடு சிறுவன் நோயுறுங்கால் தன்மகன்மீதுள்ள அன்பின் பெருக்கால் தானும் பத்திய பரிகாரங்களை மேற்கொண்டு அவனது சுகத்தினை அவாவிநிற்கின்ற தன்மையினாலும் அவ்வுண்மையை நாம் எளிதில் உணருகின்றோமல்லவா? தாயாகிய சத்தியின் கருணைத் திறம் இவ்வாறாக, ஒன்றோடொன்று தாதான்மிய சம்பந்தப்பட்டசத்தியும் சிவமும் பேதமற ஓர் வடிவில் விளங்குவதையும், அவரை வழிபடும் ஆன்மாக்களது பரிபக்குவ நிலையில் தூய உடம்பு பக்தி மேலிட்ட அவ் இறைவழிபாட்டினால் ஏற்படும் பக்திக் கனலால் நெக்குற்றுக் கரைந்து கரைந்து ஈற்றில் உருக்குலைந்து உடலே அற்று இறைவனோடொன்றி ''நானுமில்லை நீயுமில்லை நாதரூபந்தானுமில்லை, தானும் தானாக நிற்குஞ் சாயுச்யம்'' என்றபடி அருவமாய் மறையும் முத்தி நிலையையும் ஆன்றோர் வகுத்த கற்பூரதீப வழிபாட்டினின்றும் நாம் நிதர்சனமாகக் காண்கின்றோம். எங்ஙனமெனில்; வெண்பொருளாகிய

கற்பூரக்கட்டி எவருங் காணக்கூடிய ஓர் பொருள். அது தீயினுற் கொளுத்தப்பட்ட உடன் நாம் நுணுகிப் பார்ப்போமாஞல் முதன் முதல் பச்சை நிற ஒளி தோன்றி உடனே சிவந்த ஒளி விட்டெரியக் காண்போம். அது எரிந்தமுடிவிலும் செம்மைமாறி பச்சை நிறமான ஒளியில் ஒடுங்கிமறைவதையும் காண்போம். ஏனெனில் சக்தியின் வடிவம் பச்சை நிறமல்லவா? ஆகவே அது சத்தியினின்றும் உலகம் தோன்றி மறுபடியும் அச்சத்தியிலேயே ஒடுங்கி விடுகின்றது என்பதையும், பத்தி செலுத்திக் கற்பூரங்கொளுத்தி இறைவனை வழிபடுவோரது உடம்பும் கற்பூரம் போலப் பத்திக் கனலால் கரைந்து ஈற்றில் இறைவனுடன் இரண்டறக் கலந்து ஒன்றுந்தன்மை பெற்று உருப்படி இல்லாது கரைந்து மறைந்து மேலைப் பிறப்பற்று என்றும் ஆனந்தமயமாய் இருப்பதையே குறிப்பதை நன்கு அறிகின்ருேமல்லவா? அதற்காகவே முன்னுள்ள பெரியோர் கற்பூரதீப வழிபாட்டை எமக்குக் காட்டி வைத்துப் போயினர். நிற்க.

உமை அம்மையாரொழிந்த மற்ற இருவகைச் சத்திகளின் தாரதம்மியங்களையும் ஒருசிறிது ஆராய்வோம்.

## இலக்குமிதேவியின் தத்துவம்

கிரியா சத்தியாகிய இலக்குமியை சிவப்பு அல்லது பச்சை நிமுைடையவளாகவும் செந்தாமரை மலரில் வீற்றிருந்து கஜேந்திரன் என்னும் யானையினுல் அபிஷேகம் செய்யப் பெறுபவளாக

வும் பாவித்து வணங்கப்பெறுகின்றனள். இவ ளேயே மக்கள் விரும்புவதாகிய இவ்வுலக போ கங்களுக்குட் சிறந்த தனம் எனக்கூறும் எண்வகைப் பொருட் செல்வங்களுக்கும் உரியவளாகக் கொள் ளுகின்றோம். மேலும் அவள் பதுமம் ஆகிய செந்தாமரைமலரில் சதா வீற்றிருப்பதால் அவள் அருளுகின்ற செல்வத்தினை ''பதும நிதி'' என அழைத்தனர் ஆன்றோர். அத்துடன் திருமகள், செய்யவள், செங்கமலை, சீதேவி, தனலக்குமி, தான்யலக்குமி, செயலக்குமி, வீரலக்குமி, விஜய லக்குமி, வரலக்குமி முதலிய பெயர்களேயும் பெற்று விளங்கலாயினள்.

## சரசுவதிதேவியின் தத்துவம்

ஞானசத்தியாகிய சரசுவதிதேவியின் தத்து வத்தை நோக்குங்கால் அக்கலைமகளான கலைச் செல்வியோ என்றும் அறிவுமயமாக இருக்கின் ருள் எனக் கொள்ளப்பெறுகின்றது.

அந்த அறிவு உதிக்கும் இடமோ நெற்றியி லுள்ள புருவமத்தியமே என்பர். அதனையே நெற்றிக்கண், ஞானக்கண், அக்கினிக்கண், என வும் கொள்ளப்பெறும். அதனுற்ருன் ஞான பண்டிதனுகிய முருகனும், அறிவனுகிய விசுவ கன்மாவும் சிவனது நெற்றிக்கண்ணினின்றும் தோன்றினர் எனப்புராணங்கள் புகலாநின்றன. குற்றங்களேத்தகிக்குந் தன்மையால் அக்கினி எனச் சொல்லப்பெற்றது. முருகன் ஆறு தீப்பொறிக ளிற் ருேன்றினுன் எனவும், விசுவகன்மா ஐந்

தொழில் வேள்வியை அக்கினி வளர்த்து ஆக்கி வருவதாலும் அவ்வாறு கூறிற்று.

ஆகவே மாசகன்ற மனத்தூய்மை, வாய்மை, நேர்மை உள்ள இடத்திலேயே அறிவு உதித்தல் இயல்பாகின்றது. நாமொவ்வொருவரும் அறிவுடையவர்களாக இருக்க விரும்புகின்றோம். களங்கமற்ற சிந்தையில் உளங் கலந்திருப்பாள் அத்தேவி, தூய்மை, என்றது பரிசுத்தமான துல்லிய வெண்மை நிறத்தினை. பொதுவாக வெள்ளைத் துணியிற்றான் சாயம் ஊட்டுதல் எளிது. அழுக்குத் துணியில் அது பற்றாது. வெண்மை நிறமான ஏட்டிலே அறிவுக்குரிய நூல்களை எழுதுவதும் இம்முறை பற்றியதே. இவ்வித தத்துவ உண்மையினாற்றான் வெண்ணிறங் கொண்ட சிவத்தையும் அதில் பதிந்துள்ளதாகிய பச்சை அல்லது சிவப்பு நிறங்கொண்ட சத்தியையும் என்றும் மறவாது இருத்தற் பொருட்டே தமிழர்களாகிய நாம் நெற்றியிலுள்ள புருவமத்தியில் குளிர்ந்த சந்தனக் குளம்பாகிய வெண் பொட்டணிந்து அதிலே சாயமாகிய குங்குமத்தை இடுகின்றோம். மலினமில்லாத வெள்ளை உள்ளத்தில் தெள்ளிதிற் சாயமாகிய தெய்வ சக்தி பற்றி உறைந்து கொள்ளும் என்னும் உண்மையினாற்றான் அவ்வாறு அணிந்து வருகின்றோம். உள்ளத்திலே அகத்தூய்மை பெற்றுள்ளதோடு புறத்தூய்மையும் ஒருவாறு பிறர் அறிந்து கொள்ளுமாறு சந்தன குங்குமப் பொட்டுக்களால் விளக்கப் பெற்றது.

புருவ மத்தியில் பொட்டணிவதற்குப் பிறிதுமோர் காரணமுண்டு .அது தமிழரது பண்டைக் கால வழக்கமாகும். ஆதிகாலத்து தலையுலகிலே தோன்றிய மக்கள் (தமிழர்) உடைய புருவமத்தியில் கண்போன்ற ஓர் உறுப்பு நெற்றியில் சிறிது புடைத்துயர்ந்து இருந்தது. அது பல்லாயிர ஆண்டுகள் கழிந்த பின் இயற்கையின் மலர்ச்சி வாய்ப்பட்டு உருமாற்றம் பெற்று இன்றைய நிலைக்கு வந்துவிட்டது. சிவனுக்கு நெற்றிக்கண் உளதாய் இருந்தது என்பதும் இவ் வழக்குப்பற்றியதே என்க.

கண் என்றால் அறிவைக் குறிக்கும். ஆகவே ஒளவைப் பிராட்டியார் ''எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்'' என்று கூறியதுடன் அவரது சகோதரராகிய வள்ளுவரும்;-

> ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
> கண்ணென்ப வாழுமுயிர்க்கு''

எனக் கூறியமையாலும்; ''கல்வியே மக்கட்கு கண்ணே!'' என்று குமரகுரு பரசுவாமிகளும் கூறி கல்வியும் அறிவும் கண்ணுகக் கொள்ளப் பெற்றது. அதனுற்றான் அறிவர்களாகிய கம்மியரை கண்ணுளர் எனவும் சொல்லப் பெறுகின்றது. சிற்ப சாத்திரத்திற் கூட; ''மாதர்சிற்பீ பிதாசாஸ்திரம் அருபம் ரூபமானயத், யதாபிண்டோத்பவம் சைவ ஆச்சார்யோ விதிகிரமாத்'' என்று விளக்கியதும் அறிவின் பெருமை குறித்தென்க.

விஜயதசமி, ஆயுதபூசை முதலிய கொண்டாட்டங்களனைத்தும் கலை மகளுக்குச் செய்யும் மரியாதைகள் என்பதில் ஐயமில்லை. கலைமகள் என்றால் கலைஞர்கள் என்பதே நெறி, அறுபத்து நான்கு கலைகளும் ஐந்தொழில் வல்ல கலைஞர்களாலேயே ஆக்கப் பெற்றவை. கலைமகளைப் போற்றுவதும், கலைஞர்களைப் போற்றுவதும் ஒன்றே. ஏட்டினை வணக்கம் செய்யும் இயல்பு மிக்க மாந்தர் ஏட்டினையும் அதனை எழுதும் எழுத்தாணியையும் செய்தருளிய கலைஞர்களையும் அங்ஙனே வணங்கி வருகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டே திருக்கோவையாரிலும்:—

''ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர்காமநன் னூலி தென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங்காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே''.

என்று கூறிப் போந்தனர்.

இவ்வாறு அறிவுக்கு உறைவிடமாகிய சரசுவதியானவள் என்றும் வெள்ளைக் கமலத்தில் வீற்றிருந்து, வெண்ணிறவீணை, வெண்மணிமாலை முதலியவற்றைக் கையினிற் கொண்டு மற்றும் வெண்ணிறமான ஆபரணங்களையுமணிந்து அறிவு மயமாய் விளங்குகின்றாள் என்று புராணங்கள் கற்பனை செய்திருப்பதில் எத்துணையோ உண்மைகள் பொதிந்து விளங்குவதைக் காணலாம். இன்னும், கல்வியிற் சிறந்த காளமேகப் புலவரும் கலைமகளின் வடிவினைக் கீழ்வரும் வெண்பாவில்:—

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் — வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்!"

என்றே குறித்துள்ளார். கலைமகளின் வடிவம் தீட்டப்பெற்ற சகல ஓவியங்களிலும் அங்ஙனமே விளங்கக் காணலாம்.

கலாவல்லியாகிய சரசுவதிதேவியானவள் சகல வித்தைகளுக்கும் தாயாயிருப்பதால் அவளது தெய்வத் தமிழ்க்கலைகள் யாவும் பெரும் புலவர்களாலும் புரவலர்களாலும் மன்றங்கள் (கழகங்கள்) கூட்டி ஆராய்ந்து போற்றி வளர்க்கப்பெற்று வந்தபடியால் அக்கல்விச் செல்வம் வற்றாவளமுடையதாய் வளர்ந்தோங்க நீண்டகாலம் சங்கங்களால் பரிபாலிக்கப் பெற்று வந்தது. ஆதலால் அந்நிதியினைச் "சங்கநிதி" என்று அழைத்தனர். இலக்குமியினது நிதி பதுமநிதி என்றும் கலாவல்லியினது நிதி சங்கநிதி எனவும் அழைத்து வரலாயினர். இதனையே அப்பர் சுவாமிகளும் தமது தேவாரத்தில்:

"சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவாரவர் செல்வம் மதிப்போமல்லேம்"

என்று அறிவை வளர்க்கும் கலைச்செல்வத்தையும் புகழை வளர்க்கும் பொருட்செல்வத்தையும் உலகினர் விரும்புதல் இயல்பு என்பதை விளக்கியுள்ளார். மேலும் கலைமகளாகிய இத்தேவியின்

உண்மைச் சொரூபமாகிய அருள் ஒலித்தத்துவ விளக்க முணர்ந்த ஆன்றோர் அத்தெய்வ வடிவத்தின் சிறப்பையும் அதைவழிபடும் முறைமையினையும், அவளது அம்சமாக விளங்குபவர்களது பெருமையையும் பலவாறு பகர்ந்து போயுள்ளனர். அவற்றுட் சில:—

''எப்பொருட் கண்ணும் மன்னி இலங்கிடு மறிவாமீசன்
அப்படி விளங்குகின்ற தறிதலே அவன்றனக்கு
மெய்ப்படு பூசைவேறோர் செயலினாலன்று மெய்யே
இப்படி ஞானந்தன்னா லிறைஞ்சிடப் படுவானீசன்''
எனவும்;

''பொய்யாத புனல்முழுகிச் சாந்தமெனும் பொடிபூசிக்
கருணைமணி புனைந்தெந்நாளும்
நையாத உள்ளமெலாந் நையநாவால் நவிலாத
மாமனுவை நவின்றுமேலீ
ரையாறு மாறுறுங் கடந்துநின்ற ஆனந்தத் தேசிகனின்
அடிப்போதுக்கே
கொய்யாத மலர்கொண்டங் கருச்சித் தேத்திக்
கும்பிட்டே னென்பிறவி பின்பிட்டேனே.

எனவுங் கூறப்பெற்ற ஆன்றோர் வாக்குகட்கமைய நம் தேசியக் கவியும் தியாக புருடருமாக விளங்கிய ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரவர்கள் பின்வருமாறு:—

வெள்ளைத்தாமரைப் பூவிலிருப்பாள் வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை இன்பங் குலவுகவிதை கூறுபாவலருள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள்தேடி உணர்ந்தே ஓதும்வேதத்தினுண்ணின்
றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள்கூறும்கருணை வாசகத்துட் பொருளாவாள்"

மாதர்இங்குரற்பாட்டிலிருப்பாள்மக்கள்பேசும்மழலையிலுள்ளாள்
கீதம்பாடும்குயிலின்குரலைகிளியின்நாவை இருப்பிடம்கொண்டாள்
கோதகன்றதொழிலுடைத்தாகிக்குலவுசித்திரங்கோபுரங்கோயில்
ஈதனைத்தின்எழிலிடை யுற்ருள் இன்பமேவடிவாகிடப்பெற்ருள்.

செந்தமிழ்மணிநாட்டிடையுள்ளீர் சேர்ந்தித்தேவைவணங்குவம்வாரீர்
வந்தனம்இவட்கேசெய்வதென்ருல்வாழி அஃதிங்கெளிதன்றுகண்டீர்
மந்திரத்தைமுணுமுணுத்தேட்டைவரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தைமலரைஇடுவோர்சாத்திரம்!இவள்பூசனையன்ரும்.

வஞ்சமற்றதொழில்புரிந்துண்டுவாழுமாந்தர்குலதெய்வமாவாள்
வெஞ்சமர்க்குயிராகியகொல்லர்வித்தைஓர்ந்திடுசிற்பியர்தச்சர்
விஞ்சநற்பொருள்வாணிகஞ்செய்வோர்வீரமன்னர்பின்வேதியர்யாரும்
தஞ்சமென்றுவணங்கிடுந்தெய்வம்தரணிமீதறிவாகியதெய்வம்.

தெய்வம்யாவும்உணர்ந்திடுதெய்வம் தீமைகாட்டிவிலக்கிடுந்தெய்வம்
உய்வமென்றகருத்துடையோர்கள்உயிரினுக்குயிராகியதெய்வம் [வம்
செய்வமென்ருெருசெய்கைஎடுப்போர்செம்மைகாட்டிப்பணித்திடுதெய்
கைவருந்திஉழைப்பவர்தெய்வம்கவிஞர்தெய்வம்கடவுளர்தெய்வம்.

இரும்பைக்காய்ச்சிஉருக்கிடுவீரேஇயந்திரங்கள்வகுத்திடுவீரே
கரும்பைச்சாறுபிழிந்திடுவீரேகடலில்மூழ்கிநன்முத்தெடுப்பீரே
அரும்பும்வேர்வைஉகுத்துப்புவிமேல்ஆயிரந்தொழில்செய்திடுவீரே
பெரும்புகழ்நுமக்கேயிசைக்கின்றேன்பிரமதேவன்கலைஇங்குநீரே.

விண்ணில்நின்றெமைவானவர்காப்பர்மேவிப்பார்மிசைக்காப்பவர்நீரே.

என்று பலவாறு தேவியின் வடிவத்தையும் வழிபாட்டையும், வழிபடுவோர் இன்றியமையாப் பெருமையையும் அவர்களது தினமாகிய இத்திரு நாளையும் போற்றிப்புகழ்வதுடன் தவருன செயல் களையும் சாற்றிப்பழிக்கின்ருர். எவ்வாறெனின் உண்மையாக இத்தேவி வழிபாடு எவர்க்கும் மிக

எளிதான காரியமல்ல, வெறுமனே சாதாரண மக்கள் செய்வது போல ஏதோசில மந்திரங்களை வாயினுல் முணுமுணுத்துக்கொண்டு மனமுஞ் செயலும் வேறுபட்ட சிந்தையராய் ஏடுகள் புத்தகங்களை தேவி முன்னிலையில் வரிசை வரிசையாக அடுக்கி அதன்மேல் மலர்களையும் சந்தனம் குங்குமம் முதலியன சாத்திப்பார்ப்போர் மகிழ்வடையுமாறு பார்ப்பார் செய்யும் பாவனைப் பூசைகளெல்லாம் வெறும் சாத்திரப்படியேயன்றி நிசமானதேவி பூசனையாக மாட்டாது என்றெல்லாம் இடித்துரைத்தருளியுள்ளார். அத்துடன் பஞ்சகம்மியராகிய விசுவகர்மருக்கும் தேவிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. நவராத்திரிதினங்களில் நடைபெறும் சரஸ்வதிபூசை ஆயுத பூசைகள் விசுவகம்மியர்க்குச் சிறப்பாகவும் ஏனையோருக்குப் பொதுவாகவும் கொள்ளப்பெறுகின்றது. தொன்றுதொட்டுக் காளியாகிய சத்தியை வழிபடுபவர்கள் ஐந்தொழில் வல்லாராகிய விசுவகம்மியரே. அவர்களது குலதெய்வம் காமாட்சி என்னும் காளிகா தேவியாவள் என்றும், இவர்களே உலகக்குருமார் (செகக்குரு) பிரம்மாம்சமுடையோர்; வானுலகத்திலேயிருந்து தேவுக்கள் காப்பதுபோல பூவுலகத்திலேயிருந்து ஐந்தொழில் வல்லாரே அவனியைக்காக்கின்றனர் என்றும் தெளிவாகக்கூறியுள்ளார். இதனுலன்றே திருமூலர்தம் திருமந்திரத்திலும்:—

“ தொழிலறிவாளர் சுருதி கண்ணுகப்
பழுதறியாத பரமகுரவோர்

வழியறிவார்நல் வழியறிவாளர்
அழிவறிவார் மற்றை அல்லாதவரே.

என்று விதந்தோதிப்போகலாயினர். அத்துடன் சிறுபஞ்சமூல நூலாரும் ''தொழில்மகன்றன்னேடு மாருயினென்றும் உழுமகற்குக்கேடென்றுரை'' என்று குறிப்பிட்டுள்ளனர். இன்னும் இத்துடன மையாது யோகிசுத்தானந்தபாரதியாரவர்களும்:-

உலகை எங்கள் உளிசெதுக்கும் கோயிலென்போமே — அதன்
உருவை எங்கள் மனதிலுள்ள கனவதென் போமே!
சலவைக் கல்லில் கலைமணக்கும் சிலையமைப்போமே — ஒரு
சடமரத்தின் வாழ்வினுக்கும் உயிரளிப்போமே!

எளியவர்க்கும் செல்வருக்கும் வீடமைப்போமே
எல்லவரும் வாழுகின்ற நாடமைப்போமே
உளங்குவிந்து கடவுள்வழி பாடுகள் செய்ய
ஓங்கிவளர் கோயில்களை ஒளிரச் செய்வோமே!

தச்சர் கொல்லர் தட்டாரென்பர் தரணி மாந்தரே
தளர்வரிய கருமவீரப் புலவர் நாங்களே
உச்சமா மலைவிளக்கும் எங்கள் விளக்கே — இசை
ஓங்குநாட்டுக் கொடியும் நாங்கள் தாங்கும் வெற்றியே!

அறுசமயக் கோயிலெங்கே அறநிலையெங்கே
அறிவுடனே தொழில்வளர்க்கும் ஆலயமெங்கே
விறுவிறுப்பாய்க் கலைவளரும் வித்துவானெங்கே
வேகப்பொறிகள் எங்கேஎங்கள் வேலையில்லையேல்?

அயனுலகை அமைத்தவர்கள் விசுவகர்மாக்கள்
அழகுக்கலையை வளர்ப்பவர்கள் விசுவகர்மாக்கள்
வியனுலகை இலகுவிப்போர் விசுவகர்மாக்கள்
விசுவகரும வீரர்நீடு வாழ்க வாழ்கவே !

என்று கூறியதோடு:

“ஐந்தொழில் புரியும் அருளே போற்றி
கைத்தொழில் வளர்க்கும் கையே போற்றி
பணிசெய்வார்க் குதவும் பயனே போற்றி
பிரமசத்தியாம் பிராமியே போற்றி
விஞ்ஞானத்தின் விளக்கமே போற்றி
ஆன்மநேயம் அவனியிற் பரவுக
அமர வாழ்வளியாய் அன்னையே போற்றி.”

என்று பலவாறு புகழ்த்துதிகள் கூறி விசுவகர்ம தினமே சத்தியைப்பூசிப்பதாகிய ஆயுத பூசைத் திருநாள் என்னும் நவராத்திரி நோன்புநாளை விளக்கியவாற்றால் மெய்ம்மை மிளிருதல் காண்க. இந்த வாய்மையை உணர்ந்தன்றோ வேளாளர் பெருமையைத் தாராளமாகக் கூறப்புகுந்த கம்பர் பெருமானுந் தாம் பாடிய ஏரெழுபது என்ற நூலில்:—

“பாராலு முழவாலும் பயிராக்கி உயிர்வளர்க்கும்
பேராளர் தம்மாலே பிறருடைய பெருமையெல்லாம்
ஏராலெண்டிசை வளர்க்கும் எழுபத்தொன்பது நாட்டில்
காராளர் பெருமையெலாங் கண்ணாளர் கைத்தொழிலே!”

என்று நிரூபிக்கலானார். எனவே நவராத்திரி நோன்பு நாட்களில் தேவியைப் பூசிப்பதற்குத் துணையாக இருக்கும் பொருட்டுப் பல அறிஞர் பாடித்துதித்த துதிப்பாடல்களுட் சிலவற்றையும் ஈண்டுதருவாம்:—

## பராசக்தி துதி

மாதா பராசக்தி வையமெலாம் நீநிறைந்தாய்!
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வா யெமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே!

## கலைவாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப்போலே அறிவுமுத்து மாலையினுள்
காணுகின்ற காட்சியதாய் காண்பதெலாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே!

## இலக்குமி

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் சிறீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே!

## பார்வதி

மலையிலேதான் பிறந்தாள் சங்கரனைமாலையிட்டாள்
உலையிலேஊதி உலகத்தொழில்வளர்ப்பாள்
நிலையிலேஉயர்ந்திடுவாள் நேரேஅவள்பாதம்
தலையிலேதாங்கித் தரணிமிசைவாழ்வோமே!

எண்ணியமுடிதல்வேண்டும்நல்லவேஎண்ணல்வேண்டும்
திண்ணியநெஞ்சம்வேண்டுந் தெளிந்தநல்லறிவுவேண்டும்
பண்ணியபாவமெல்லாம்பரிதிமுன்பனியேபோல
நண்ணியநின்முனிங்குநசித்திடல்வேண்டுமன்னாய்!,,

— சி. சு. பாரதியாரவர்கள்

கனத்தாள் வெங்கயமுனுங்கந்தனுஞ்சம்பந்தனும்பாலுண்டகும்ப
தனத்தாளே அறம்வளர்த்தகரத்தாளேதிரிபுரங்கடழலாய்வேவச்
சினத்தாளே சிறியோர்கள்செய்தபிழைபொறுத்திரக்கஞ்செய்யுஞ்செய்ய
மனத்தாளேநின் கமலமலர்த்தாளேயென்றலைமேல்வைத்தாள்வாயே

---

உலகத் தொழில்க ளொருங்காற்று முத்தம ருள்ளத்திலும்
இலகக் களனி உழுவோர்கள் கையிலு மின்புலவோர்
திலகத்தவள அவர்நாவி லுந்தினம் தேடிநின்று
கலகந்தவிர நடமாடும் வாணியைக் கைதொழுவாம்!

—விசுவகலாமணி இ. சி. க.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்!

படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோற் கையும் — துடியிடையும்
அல்லும் பசலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி!

---

சித்தந் தெளிந்திடும் செய்வினையாவும் திருத்தமுறும்
நித்தம் மறிந்தெழு செல்வமுந்தங்கி நிலைபெறுங்நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும் இம்மூதுலகில்
பத்தர்க் கருளும் திருமகள்பாதம் பணிகுவமே!

பொருளற்றவர்க்கிவ் வுலகில்லை என்றிப் புவிபுகழும்
தெருளுற்ற ஞானிஅப் பொய்யாமொழியில் தெரிந்துரைத்தான்
மருளுற்ற யாந்தரும் வற்றாதசெல்வம் இவ்வையகத்தன்
அருளுற் றல்லா தடைவாரோ? செந்தாமரை ஆண்டவளே!

— தேசிகவிநாயகம்பிள்ளை

நித்தமுனை வேண்டிமனம் நினைப்பதெலாம் நீயாய்
பித்தனைப்போல் வாழ்வதிலே பெருமையுண்டோ திருவே?
சித்தஉறுதி கொண்டிருந்தார் செய்கையெலாம் வெற்றிகொண்டே
உத்தமநிலை சேர்வரென்றே உயர்வேத முரைப்பதெல்லாம்
சுத்தவெறும் பொய்யோடீ! சுடர்மணியே! திருவே!
மெத்தபயல் கொண்டுவிட்டேன் மேவிடுவாய் திருவே!

உன்னையன்றி இன்பமுண்டோ உலகமிசை வேறே
பொன்னையடி வென்றுடையாய் புத்தமுதே! திருவே!
மின்னொளிசேர் நன்மணிகள் மேடையுயர் மாளிகைகள்
வன்னமுடை தாமரைப்பூ மணிக்குளத்துச் சோலைகளும்
அன்னம் நறுநெய்பாலும் அதிசயமாய்த் தருவாய்நீ
நின்னருளை வாழ்த்தி என்றும் நிலைத்திருப்பேன் திருவே!

## வேறு

மாதவன் சத்தியினைச் செய்ய — அந்த
மலைவளர் மணியினை வாழ்த்திடுவோம்!
போதுமிவ் வறுமையெலாம் — எந்தப்
போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் — உயர்
வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை — அன்னை
மாமகளடியிணை சரண்புகுவோம்.

— பாரதியார்

பூரணிபுராதனி சுமங்கலை சுதந்தரி புராந்தகிதிர் யம்பகி யெழிற்
புங்கவிவிளங்குசிவ சங்கரிசகத்ரதள புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணிமனாதீத நாயகிகுணாதீத நாதாந்த சத்தியென்றுன்
நாமமேயுச் சரித்திடுமடியர்நாமமே நானுச்சரிக்கவசமோ?
ஆரணி சடைக்கடவு ளாரணியெனப்புகழ அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங்கன்னியென மறைபேசும்ஆனந்தரூபமயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ்கங்கை சூழ்வளமருவு தேவையரசே
வரைராசனுக்கிருகண்மணியாயுதித்தமலைவளர் காதலிப்பெணுமையே

— தாயுமானவர்

தொடுக்குங்கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந்தமிழி னொழுகுநறுஞ் சுவையேயகந்தைக்கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்பருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்ச்சிமிகு
இமயப்பொருப்பில் விளையாடும் இளபென்பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்திலழ
கொழுகவெழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்குங்குழற்கா டேந்துமிள வஞ்சிக்கொடியே வருகவே!
மலையத்துவசன் பெற்றபெரு வாழ்வே வருகவருகவே!

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற் பிடியேவருக முழுஞானப்
பெருக்கேவருக பிறைமவுலிப் பெம்மான் முக்கட்சுடர்க்கிடுநல்
விருந்தே வருகமும்முதற்கும் வித்தேவருக வித்தின்றி
விளைந்தபரமா னந்தத்தின் விளைவேவருக பழமறையின்
குருந்தேவருக அருள்பழுத்த கொம்பேவருக திருக்கடைக்கண்
கொழித்தகருணைப் பெருவெள்ளம் குடைவார் பிறவிப்பெரும்
மருந்தேவருக பசுங்குதலை மழலைக்கிளியே வருகவே (பிணிக்கோர்
மலையத்துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே!

— குமரகுருபரசுவாமிகள்

---

வாணி சரஸ்வதியே — நல், வாக்கின் அதிபதியே
ஞானக் கலைமதியே — இன்ப, நாட்டம்வைத் தாள்தத்தியே!
தாமரை வாழ்பவளே — சங்கத், தமிழினிற் றோய்பவளே
நாமகள் பாரதியே — மெய்ஞ், ஞானப்பொற் சாரதையே
வெள்ளி நிறத்தினளே — தமிழ், வீணைக் கரத்தினளே;
முல்லைச்சிரிப்பினளே — ஒளி, முந்துச் சரத்தினளே!
மின்னற் கொடியிடையாய் — ஒளி, வீசும் எழிலுடையாய்
கன்னல் மொழியுடையாய் — கவிக், காந்தவிழியுடையாய்!
ஓதப்பயிலுவிப்பாய் — மனத், துள்ளே உணரவைப்பாய்
மாதவர் நாவிருப்பாய் — நான், மறைகள்வி ரித்துரைப்பாய்!
எண்ணத் தினிப்பவளே — புவி, எங்கும் தொனிப்பவளே!
வண்ணக் கலைமகளே — என், வாக்கில் அமர்ந்தருளே!

எங்கும் நிறைந்த சக்தி — புவி, யாவும் படைத்த சக்தி
பொங்கும்பேரன்புருவில் — அருள், பொழியும் அமரசக்தி!
கல்லில் உறங்கும் சக்தி — உயிர்க், கனலில் துடிக்கும் சக்தி!
புல்லில் துளிர்க்கும்சக்தி — எழில், பூவில் மலரும் சக்தி!
காயிற் புளிக்கும் சக்தி — நல்ல, கனியில் இனிக்கும் சக்தி!
சேயின் எழில் முகத்தில் — இளஞ், சிரிப்பை மலர்த்தும் சக்தி!
தீமை அகற்றும்சக்தி-உயர், செல்வம் அளிக்கும் சக்தி!
வாய்மைதுலக்கும் சக்தி-அருள், வண்மை வளர்க்கும்சக்தி!
ஓங்கிவளர்ந்தசக்தி—பல், உயிர்க்குயிரானசக்தி
தாங்கிஅணைக்கும்சக்தி—அருட், தாயானசுத்தசக்தி!

## வேறு

அம்மணீஜகதாம்பிகே!கருணாகரீ!பரமேஸ்வரீ!
கண்மணீ!ஜெயகௌரி!காங்கயி!கார்த்திகே!திரிநேத்திரீ!
தண்மயீ!உபசாந்தினீ!சிவசாம்பவீ!ஏகாம்பரீ!
சின்மயீ!சுபசீலி!மாலினி, தேவி!சௌந்தரிஓம்நமோ!
பத்ரகாளி!துர்க்கா!பவானீ!பராசக்தீ!பரிபாலினீ!
சித்சொரூபிணி!சிம்மவாகினி;திவ்யராஜராஜேஸ்வரி
வித்வபூஷணி!மீனலோசனி!வீரமர்த்தனி! விமலினீ!
சத்யவாசனி!நித்யகன்னி!தயாபரீ!நமஓம்நமோ!
குண்டலீ!சந்த்ரமண்டலி!இளங்கோமளீ! இன்பஸ் யாமளீ!
சண்டிகா!சாமுண்டி!பைரவி!சாவித்ரீ!ஜெபகாயத்ரீ!
அண்டர்நாயகி! ஆபத்பாந்தவி! அமுதஞானபயோதரீ!
தொண்டர்சாதகி!துய்யவானதி!சோமசேகரி!ஓம்நமோ!
சுத்தசக்தி!சுடர்க்கொடி;திவ்ய சுந்தரீ! ஸ்ரீபுராந்தகீ!
வித்தகீ!தெய்வநர்த்தனீ!ஜய விஜயி!பாபவிநாசினீ!
சித்தரஞ்சனீ!தெய்வகுஞ்சரி!தேவதா!உமா!பார்வதீ!
நித்யவாணி!நிரஞ்சனீ!மலைநீலி!சங்கரிஓம் நமோ!
சந்த்ரமௌலி!சரஸ்வதீ!திவ்ய சாரதா!ஜயபாரதி!
சுந்தராங்கி!சுராநுதா!விஸ்வ சோபிதா!சாம்ப்ரபாவதீ!
மந்த்ரரூபிணி!மாபகவதீ!மாஹிஷாசுரமர்த்தனீ!
தந்த்ரசாதனி!செஞ்சடாதரிசர்வதாரகிஓம்நமோ!

அஷ்டலட்சுமி! அபயஹஸ்தனி! அமலினீ! செங்கமலினீ!
நிஷ்டையோகினி! நிமலவாகினி நிஷ்களங்கசந்யாசினி!
துஷ்டநிக்ரகி! தூயவைஷ்ணவி! சோதிவேணி! சுமங்கலி!
சிட்டரட்சகி! ஸ்ரீவராகினி! சீதளீ! நமஓம்நமோ!

பூரணீ! ஞானபூஷணீ! வேதபோதினீ! தர்மசாதனீ!
ஆரணீ! நவசீரணீ! உலகாண்டவீ! உக்ரதாண்டவீ!
காரணீ! சிவகாமினீ! ஜீவகாருணீ! ஜகன்மோகினீ!
தாரணீ! பவதாரணீ! புவிநாயகீ! நமஓம்நமோ!

—பரமஹம்ஸதாசன்.

## சகல கலாவல்லி மாலை

வெண்டாமரைக்கன்றிநின்பதந்தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத்தகாதுகொலோசகமேழுமளித்
துண்டானுறங்கவொழித்தான்பித்தாகவுண்டாக்கும்வண்ணம்
கண்டான்சுவைகொள்கரும்பேசகலகலாவல்லியே!

நாடும்பொருட்சுவைசொற்சுவைதோய்தரநாற்கவியும்
பாடும்பணியிற்பணித்தருள்வாய்பங்கயாசனத்திற்
கூடும்பசும்பொற்கொடியேகனதக்குழையுமைம்பாற்
காடுஞ்சுமக்குங்கரும்பேசகலகலாவல்லியே!

அளிக்குஞ்செழுந்தமிழ்த்தெள்ளமுதார்ந்துன்னருட்கடலிற்
குளிக்கும்படிக்கென்றுகூடுங்கொலோஉளங்கொண்டுதெள்ளித்
தெளிக்கும்பனுவற்புலவோர்கவிமழைசிந்தக்கண்டு
களிக்குங்கலாபமயிலேசகலகலாவல்லியே!

தூக்கும்பனுவற்றுறைதோய்ந்தகல்வியுஞ்சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப்பணித்தருள்வாய்வடநூற்கடலும்
தேக்குஞ்செழுந்தமிழ்ச்செல்வமுந்தொண்டர்செந்நாவினின்று
காக்குங்கருணைக்கடலேசகலகலாவல்லியே!

பஞ்சப்பிதந்தருசெய்யபொற்பாதபங்கேருகமென்
நெஞ்சத்தடத்தலராததென்னேநெடுந்தாட்கமலத்
தஞ்சத்துவசமுயர்த்தோன்செந்நாவுமகமும்வெள்ளைக்
கஞ்சத்தவிசொத்திருந்தாய்சகலகலாவல்லியே!

பண்ணும்பரதமுங்கல்வியுந்தீஞ்சொற்பனுவலும்யான்
எண்ணும்பொழுதெளிதெய்தநல்காயெழுதாமறையும்
விண்ணும்புவியும்புனலுங்கனலும்வெங்காலுமன்பர்
கண்ணுங்கருத்துநிறைந்தாய்சகலகலாவல்லியே!

பாட்டும்பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும்படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பாலமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள்ளோதிமப் பேடேசகல கலாவல்லியே!

சொல்விற்பனமு மவதானமுங்கவி சொல்லவல்ல
கல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கரிதென் றொருகாலமுஞ்சிதை யாமைநல்கும்
கல்விப்பெருஞ் செல்வப்பேறே சகலகலாவல்லியே!

சொற்கும்பொருட்குமுயிராமெய்ஞ்ஞானத்தின்றோற்றமென்ன
நிற்கின்றநின்னைநினைப்பவர்யார்நிலந்தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின்பிடியோடரசன்னநாணநடை
கற்கும்பதாம்புயத்தாயேசகலகலாவல்லியே!

மண்கண்டவெண்குடைக்கீழாகமேற்பட்டமன்னருமென்
பண்கண்டளவிற்பணியச்செய்வாய்படைப்போன்முதலாம்
விண்கண்டதெய்வம்பல்கோடியுண்டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோசகல கலாவல்லியே!

தேவி திருவடி வாழ்க!

தெய்வத்திருத்தமிழ் வளர்க!!

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.